# அறிவு

மலர் - 07 மார்ச் / ஏப்ரல் - 2009 இதழ் - 02



அகத்தியர்

35/-

**With Best Copliments From**

# THAYA STORES

***93, Mahavidiyalayam Mawatha***
***Colombo - 12***

All types of Corporation Steel and heavy G I pipes ara vailable

***T.P. 0114 - 613197***
***0112 - 448059***

# உங்களுடன் ஒரு நிமிடம்.

உங்கள் கைகளில் தவழும் 2009ம் ஆண்டின் 2வது இதழ் மூலம், "வார்த்தைகளற்ற மனிதனின் வார்த்தைகள்" என்ற நூலின் ஓஷோவின் மனதைப்பற்றிய கருத்து ஒன்றைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

மனதைப் பற்றி, மிகவும் புதிரான விஷயம் என்னவென்றால், நீங்கள் அதை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தால், அது தன்னால் மறைய ஆரம்பிக்கும். எப்படி வெளிச்சம், இருளை விரட்டுகிறதோ, அதுபோல, சாட்சிபோல் நின்று பார்ப்பது, எண்ணங்களை விரட்டிவிடும். ஒரு கட்டத்தில் எண்ணங்களே இல்லாமல் ஆகிவிடும். ஆகவே, தியானம் என்பது வெறுமையாக, விழிப்போடு உங்கள் எண்ணங்களைப் பார்த்தல் ஆகும். அப்பொழுது உண்மை, தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொள்ளும். அது எதையும் புதிதாகக் கண்டுபிடிக்காது. ஆனால், ஏற்கனவே இருப்பதைத் தெளிவுபடுத்திக்காட்டும்.

அங்கு என்னதான் இருக்கிறது? முடிவு இல்லாத, ஆழமான, மிகவும் அழகான, அமைதியான, ஒளிமயமான, நறுமணமிக்க கடவுளின் அரண்மனைக்குள் செல்லும் உணர்வைப் பெறுவீர்கள். என்னுடைய வார்த்தையில் சொல்லுவதானால், நீங்கள் கடவுள் தன்மைக்குள் செல்லுகிறீர்கள். அப்படி இந்த பரந்த வெட்டவெளியில் நுழைந்துவிட்டால், நீங்கள் வெளியே திரும்பி வரும்பொழுது. முற்றிலும் மாறுபட்டு இருப்பீர்கள் ஒரு புதிய பிறவியை எடுத்திருப்பது போன்று உணருவீர்கள். இப்பொழுது உங்களிடம் உள்ள முகம் தான். உண்மையான முகம் எல்லா வேஷங்களும் மறைந்துவிட்டன.

**57, பிரதான வீதி,**
**திருக்கோணமலை.**
**தொ. பே. 026-2222207**

S.P. ராமச்சந்திரன்
(ஆசிரியர் குழுவிற்காக)

# அறிவு

"ARIVU" - KNOWLEDGE

சந்திரசேகரம்பிள்ளை ஞானாம்பிகை ஸ்தாபித - வெளியீடு

**41, கல்லூரி வீதி, திருக்கோணமலை.**

Sandrasegarampillai Gnanambigai Establishment

*41, College Street, Trincomalee*


## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. உங்களுடன் ஒரு நிமிடம் | 01 |
| 2. பொருளடக்கம் | 02 |
| 3. ஆக பழமையான செய்தி | 03 |
| 4. நினைவில் நிற்பனை– தாமரைத்தீவான் | 09 |
| 5. சித்தர்கள் யார் | 11 |
| 6. உங்களுக்கு உதவும் மூன்று 'ந' முறைகள் | 17 |
| 7. நன்றி மறவாமை | 20 |
| 8. கம்பியூட்டர் நேற்று–நாளை–இன்று | 24 |
| 9. சத்தியவாழ்வு | 29 |
| 10. சைவ சித்தாந்தம் – 06 | 32 |
| 11. சித்தர் அகத்தியர் (அட்டைப்படக் கட்டுரை) | 38 |
| 12. தமிழ்நாடு வரலாற்றுச் சுவடுகள் | 45 |




எமது ஸ்தாபித காரணகர்த்தாக்கள்

திரு. திருமதி. சந்திரசேகரம்பிள்ளை

ஞானாம்பிகை

அவர்கட்கு அறிவு – 2009 –2வது

இதழை சமர்ப்பிக்கிறோம்



# ஆக பழமையான செய்தி...

**"விந்தை என்னவென்றால் எவ்வளவுதான் பழைமையான செய்தியாக இருந்தபோதிலும், ஒவ்வொரு முறையும் கூறப்படும் பொழுது அது புதுமையாகவே ஒலிக்கிறது"**

**- மஹாராஜி -**

இந்த உலகத்திற்கு ஒரு செய்தி வழங்கப்படுகிறது. மிகவும் பழைமையான செய்திதான், ஆயினும் முற்றிலும் புதிய வகையில் வழங்கப்படுகிறது. விந்தை என்னவென்றால், எவ்வளவுதான் பழைமையான செய்தியாக இருந்தபோதிலும், ஒவ்வொரு முறையும் கூறப்படும் பொழுது ஒரு புதுமையாகவே ஒலிக்கிறது.

இது உங்களைப் பற்றியது. இது உங்கள் உயிரைப் பற்றியது. இது நன்றியுணர்வோடு இருப்பதைப் பற்றியது. இது ஆனந்தத்தில் திளைத்திருப்பதைப் பற்றியது. இது நிசப்தமாய் இருப்பதைப் பற்றியது. இது உங்களுக்குள்ளே நீங்கள் பயணம் செய்து, அங்கு என்ன இருக்கிறதோ அதை செவிமடுப்பதையும், உணர்வதையும் பற்றியது. இது உங்களைப் பற்றியது. நீங்கள் தேடிக்கொண்டிருப்பது உங்களுக்குள்ளே தான் இருக்கிறது. இங்கு வழங்கப்படுவது வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல, அந்த வார்த்தைகளுக்கு எல்லாம் ஆதாரமான ஞானவழிமுறை வழங்கப்படுகிறது. அது தனித்தன்மை வாய்ந்தது. இது ஒருவரின் கற்பனையிலிருந்து பிறந்ததல்ல. இது பேருண்மையானது.

மிகவும் ஆழமான, நிஜமான, எளிமையான செய்தியை சொல்வதென்பது அற்புதமதான ஒன்றாகும். நான் தைவான், ஆஸ்திரேலியா, ஜப்பான், அல்லது தென்னமெரிக்காவில் உரையாற்றினாலும், இந்தச் செய்தி உண்மையிலேயே இவ்வுலகத்தில் உள்ள எல்லாவித தடைகளையும் கடந்து செல்கிறது. மக்களிடையே பல விஷயங்கள் தடையாக உள்ளன. இருந்தாலும் எளிமையான ஒரு விஷயத்தை நீங்கள் யாரிடம் பேசினாலும் அவர்களால் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்கள் எங்கிருந்து வந்திருந்தாலும் சரி, என்ன செய்து கொண்டிருந்தாலும் சரி, அவர்களின் உள்ளம் திறக்க ஆரம்பிக்கிறது..

ஏன் என்றால் தங்கள் உள்ளத்தினுள்ளே மேலும் ஏதோ ஒன்று

இருக்கிறதென்று ஒவ்வொருவருக்கும் தெரியும் என்று நான் நினைக்கிறேன். தங்கள் உள்ளத்தின் கூக்குரலை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக ஏதோ ஒன்று இருப்பதாக, தங்களின் ஆழ்மனதில் ஒலிக்கும் செய்தியை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அச்சிடப்பட்ட சொற்களாக எங்கும் பரவுவதற்கு முன்பே, இந்த ஒரு செய்திதான் காலங்காலமாக நிலையானதாக இருந்து வந்துள்ளது.

இப்பாதையில் என்னை நடைபோட வைத்தவருக்கும், இதனை கண்டுணர உதவியவருக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்களுக்குத் தாகமெடுத்தால் நீங்கள்தான் தண்ணீர் குடிக்க வேண்டும். உங்களுக்காக மற்றவர் தண்ணீர் குடிக்க முடியாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஞானவழிமுறை என்பது நான்கு பயிற்சி முறைகளைக் கொண்டது. அது வெளியே செல்லும் ஒருவரின் கவனத்தை உள்ளே திருப்பி தன்னுள்ளிருக்கும் அனுபவத்தை உணர்வதற்கான ஒரு வழியாகும். இது எண்ணங்களோ கற்பனைகளோ அல்ல. கவனத்தை உள்ளே திருப்பி ஏற்கனவே நம்முள்ளே இருக்கும் ஒன்றை அனுபவிப்பதற்கான ஒரு செயல்முறையான வழியாகும்.

"ஞானவழிமுறைக்கான பயணம், தன்னையே அறிவதற்கான பயணமாகும். இந்த பயணத்தைத் தொடர விரும்புகிறவர்கள் தயாராவதற்கும், வாழ்நாள் முழுதும் இன்பத்தில் லயித்திருப்பதற்கும் நான் உதவி புரிகிறேன்.

## மஹராஜியின் செய்தி

**மஹராஜி என உலகெங்கும் அழைக்கப்படும் பிரேம் ராவத் அவர்கள் உலகெங்கும் வாழும் மக்கள் தமக்குள்ளேயே அமைதியை, ஆனந்தத்தை, நிறைவைக் கண்டு கொள்வதற்கான ஊக்கத்தையும், உதவியையும் வழங்குகின்றார். இவர் இந்தியாவில் பிறந்தார். தமது மூன்று வயதில் இவர் மக்கள் முன் பேச ஆரம்பித்தார். எட்டு வயதில் இவர் தனது அமைதி பற்றிய செய்தியை இந்திய உபகண்டம் எங்கும் வழங்க ஆரம்பித்தார். பதின்மூன்றாம் வயதில் இவர் லண்டனிலும் லொஸ்ஏஞ்சலிலும் பேச அழைக்கப்பட்டார். அன்றிலிருந்து உலகின் பல்வேறு பகுதிகளின் 60 நாடுகளைச் சேர்ந்த 300 நகரங்களில் வாழும் ஒரு கோடி மக்கள் அந்த ஊக்கத்தையும் உதவியையும் பெறுவதற்காக அவரிடம் வந்துள்ளார்கள்.**

"நான் வழங்குவது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. உள்ளே உள்ள அமைதியினதும் நிறைவினதும் அனுபவத்தை அடைவதற்கான வழிமுறை அறிவினையே நான் வழங்குகின்றேன். இதனை நான் ஞானவழிமுறை என அழைக்கின்றேன்.

"ஞானவழிமுறை எதனைச் சாத்தியமாக்குகின்றது என்றால், சூழ்நிலைகள் எதிலுமே தங்கியிருக்காத வாழ்க்கை ஆனந்தத்தைச் சாத்தியமாக்குகின்றது. இது தனக்குள்ளே உள்ள தான் என்னும் பொருளின் அனுபவத்துடன் தொடர்பு கொள்வதற்கான ஒரு வழி.

"ஞானவழிமுறை நான்கு செயல்முறைக்ளைக் கொண்டுள்ளது. அவைகள் ஒருவரின் வெளிச்செல்லும் கவனத்தை அதிலிருந்து திருப்பி உள்ளே செலுத்துகின்றது. இது ஒரு கற்பனையோ, பாவனையோ அல்ல. இது உள்ளே கவனத்தைக் குவித்து ஏற்கனவே எது உள்ளே இருக்கின்றதோ அதை அடைவதற்கான ஒரு நடைமுறைச்சாத்திய வழி.

"ஞானவழிமுறை பயணம் தன்னைத்தானே கண்டுபிடிக்கும் ஒரு பயணம்.

"யாரெல்லாம் இப்பயணத்தை மேற்கொள்ள விரும்புகின்றார்களோ அவர்களுக்கெல்லாம் ஞானவழிமுறையைக் கற்றுக் கொள்வதற்குத் தயார்படுத்தி உதவி வழங்குவேன். அத்துடன் அவர்களுக்குத் தொடர்ச்சியான ஊக்கத்தையும், உதவியையும் அவர்கள் வாழ்நாள் பூராவும் ஆனந்திக்குமாறு வழங்குவேன்"

## மஹராஜியிடமிருந்து

ஞானவழிமுறை என்பது நான்கு பயிற்சி முறைகளைக் கொண்டது. அது வெளியே செல்லும் ஒருவரின் கவனத்தை உள்ளே திருப்பி தன்னுள்ளிருக்கும் அனுபவத்தை உணர்வதற்கான ஒரு வழியாகும். இது எண்ணங்களோ கற்பனைகளோ அல்ல. கவனத்தை உள்ளே திருப்பி ஏற்கனவே நம்முள்ளே இருக்கும் ஒன்றை அனுபவிப்பதற்கான ஒரு செயல்முறையான வழியாகும்.

"ஞானவழி முறைக்கான பயணம், தன்னையே அறிவதற்கான பயணமாகும். இந்த பயணத்தைத் தொடர விரும்புகிறவர்கள் தயாராவதற்கும், வாழ்நாள் முழுதும் இன்பத்தில் லயித்திருப்பதற்கும் நான் உதவி புரிகிறேன்."

– மஹராஜி –

## எங்கள் உள்ளே

எல்லோருக்கும் கனவுகள் உள்ளன. அதிர்ஷ்டவசமாக அந்த கனவுகளைவிட நிஜம் அழகானது. "நீ எதை தேடுகின்றாயோ அது உன் உள்ளே இருக்கின்றது. உன் மெய்ப்பொருள், உன் அமைதி உன் உள்ளே இருக்கின்றது." என காலங்காலமாக ஒரு குரல் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. அவற்றை உணர விரும்பும் ஆவலைத்தான் நான் தாகம் என்கின்றேன். ஒவ்வொரு மனிதனின் உள்ளேயும் இயல்பாகவே எளிமையான, நிஜமான ஒரு தாகம் இருக்கின்றது. அது அமைதிக்கான, இன்பத்திற்கான, திருப்திக்கான தாகம். நம் வாழ்க்கையில் ஏழை பணக்காரன், நன்மை தீமை, சரி தவறு, இன்ப துன்பம் என சூழ்நிலைகள் இருந்தாலும் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அமைதியை நம்மால் உணர முடியும். இது ஒவ்வொரு மனிதனுடைய பிறப்புரிமையாகும்.

என் செய்தியின் வித்தியாசம் இதுதான். அமைதி, இன்பம் மற்றும் உண்மை உணரப்படுவதற்காக நம்முள்ளத்தில் காத்துக் கொண்டிருக்கிறது. நான் உயிரோடு இருக்கிறேன்; நீங்களும் உயிரோடு இருக்கிறீர்கள். நம்முள்ளே ஆழமும் அழகும் நிறைந்த ஒன்றை அறிந்துகொள்ளக்கூடிய நம்முடைய நேரம் இதுதான்.

## ஏற்றுக் கொள்ளுதல்

நாம் தேடுவது நம்முள்ளேயே இருக்கின்றது. வெளியே அல்ல.

சாந்தி அமைதி மற்றும் எளிமையானதோர் இன்பத்தை நம்முள்ளேயே நாம் கண்டுகொள்ள முடியும். அமைதியைப் பெற்றிருப்பது நல்லது என்ற எண்ணம் மட்டுமில்லாமல் அதனை உணரவும் வேண்டும். நம் வாழ்வில் நமக்கு நிலையான அமைதி உறுதியாக இருத்தல் வேண்டும். ஆகவே, இப்பயணம் அதிமுக்கியம் வாய்ந்ததாக இருக்கின்றது.

நாம் தேடுவது நம்முள்ளே இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ள தயாராகுவதற்கு முதலில், நமக்கு நம்பிக்கை வேண்டும். வெளியிலுள்ள விஷயங்களுக்கும் நம் உள்ளத்தின் உணர்வுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிய வேண்டுமானால், வெளியே நம் கவனத்தை ஈர்க்கும் விஷயங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

நாம் இந்த வித்தியாசத்தை உணரும்போதுதான் நாம் தேடும் அந்த அமைதி,

அழகு மற்றும் இன்பம் நம்முள்ளேதான் இருக்கிறது என்பதை அறிய நமக்கு மேலும் எளிதாக இருக்கும். பிறகு நம்முள்ளே ஊர் உலகம் இருப்பதை நாம் ஏற்றுக்கொள்ளத் தொடங்குகின்றோம்.

## அனுபவம்

அனுபவத்திற்கென்றே நாம் படைக்கப்பட்டுள்ளோம். மிகவும் வியப்பூட்டும் விதத்தில் அனுபவிக்கக்கூடிய இயந்திரம் நாம்தான். நம்மால் வெப்பத்தையும் குளிரையும், இன்பத்தையும், துன்பத்தையும் அனுபவிக்க முடிகின்றது.

இந்த அற்புதமான அனுபவிக்கும் இயந்திரத்தை நம்முள்ளிருக்கும் ஒன்றுடன் இணைத்தால், அமைதி, இன்பம் மற்றும் ஆனந்தத்தை அனுபவிக்கலாம்.

இந்த அனுபவம் உணரப்பட வேண்டிய ஒன்றாகும். உங்களால் இந்த அனுபவத்தை உருவாக்க முடியாது. சந்தோஷத்திற்கான சின்னங்களும் திட்டங்களும் உள்ளத்திற்கு திருப்தியளிக்காது. சந்தோஷம் உணரப்பட வேண்டும். உள்ளம் அந்த அமைதியை உணர வேண்டும்.

உங்கள் உள்ளம் சாந்தியையும் அழகையும் உணருகின்றதா? அல்லது வெறுமையை உணருகின்றதா? அந்த வெறுமை அகன்று விட வேண்டுமானால் உங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் நிறைவை உணர வேண்டும். பிறகு நீங்கள் சாந்தியை உணரலாம். அந்த அழகை உணரலாம்.

இவற்றை பற்றியதுதான் ஞானவழிமுறை எனும் அன்பளிப்பு.

## ஞானவழிமுறை எனும் அன்பளிப்பு

நான் வெறும் வார்த்தைகளை மட்டும் வழங்கவில்லை. உங்கள் உள்ளேயிருக்கும் அமைதியையும் நிறைவையும் அனுபவிப்பதற்கு ஒரு வழியை வழங்குகின்றேன். அதை ஞானவழிமுறை என்றழைக்கின்றேன். நம்முடைய அன்றாட சூழ்நிலைகளுக்கு அப்பால், வாழ்க்கையை இன்பமாக அனுபவிப்பதை ஞானவழிமுறை சாத்தியமாக்குகின்றது. இது உள்ளிருக்கும் அனுபவத்தோடு தொடர்பு கொள்வதற்கான ஒரு வழியாகும். ஞானவழிமுறை நான்கு பயிற்சி முறைகளைக் கொண்டது. இது வெளியே சென்று கொண்டிருக்கும் கவனத்தை உள்ளே செலுத்துவதற்கான ஒரு செயல்முறையான வழியாகும். இது வெறும் கற்பனையல்ல.

தன்னையே அறியும் பயணம் தான் இந்த ஞான வழிமுறையின் பயணம்.

இப்பயணத்தை மேற்கொள்ள விரும்புகிறவர்களுக்கு, நான் ஞானவழி முறையின் பயிற்சி முறைகளைக் கற்றுக்கொள்ள தயாராகுவதற்கான உதவிகளை வழங்குகின்றேன். இந்த வாழ்நாளை இன்பகரமாக அனுபவிப்பதற்கு தொடர்ந்து உற்சாகமளித்து வழிகாட்டுகின்றேன்.

**–மஹறாஜி–**
**"மேலும் அறிந்து கொள்ளுதல்"**
**பிரசுரத்திலிருந்து**

**மேலதிக விபரங்களுக்கு.**
**வசந்தசாலை 33, சிவன் வீதி,**
**திருகோணமலை.**
**தொ.பே. 026-2224894**

www.tprt.org
www.maharaji.net
www.contactinti.net

## அறிவு சந்தா விபரம்

உள்நாடு:-

தனிப்பிரதி ரூபாய்: 35/=

ஆண்டுச் சந்தா ரூபாய் 180/=

காசு, காசோலைகளை அனுப்பவேண்டிய முகவரி:-

S.P. இராமச்சந்திரா
57, பிரதான வீதி,
திருக்கோணமலை

வெளிநாடு:- தபால் செலவு தனி



# நினைவில் நிற்பவை

## தாமரைத்தீவான் சுயசரிதைத் தொடர் –7

கந்தளாய்:– (1) குளம்– 61–2ல் கந்தளாய்ப் பழைய ஊர்க் கோயிலடி அரசினர் பள்ளிக்கு மாற்றம் பெற்றேன். கணபதிப்பிள்ளை தலைமை (வெற்றிலை) 85 பிள்ளைகள் 5 வகுப்பு வரதராசா–கனகலட்சுமி திருநாமம்–யோகராணி–ராசாத்தி–அழகுராணி–ஜெயநாதன்–பவானி மற்றும் பல பிள்ளைகளும் (பிரப்பம்பழத்துடன்) வருவர். நான்போட்டங்காடு (பேராற்று வெளி) நாகம்மாப் பெரியம்மா வீட்டிலிருந்து மிதிவண்டியில் வருவேன். பின்னர் விசுவநாதர் (பக்கத்தில்) வீட்டிலிருந்து வந்ததுண்டு. மகாசேனன் (சிங்கள மன்னன்) கட்டியதாகச் சொல்லிய குளம் குளகோட்டு மன்னரால் (சோழகங்கன்) 1224ல் கட்டியதாகவும் சொல்லப்படும். உயர்ந்த அணைக்கட்டு கச்சானில் அலைமோதும் கட்டின் தெருவில் ஊர்திகள் செல்லும். மாரியில் நீர் நிரம்பின் வான் (உயரம்) பாயும். ஒருமுறை உடைத்து ஊரையும் மக்கள் சிலரையும் விழுங்கியது முண்டு. பின் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

(2) வாய்க்கால் – கந்தளாய்க்குளத்தின் பெருமதகைத் திறந்துவிட்டால் பெருவாய்க்கால் மூலம் பேராறு போல் நீர் பாய்ந்து கந்தளாய் போட்டங்காடு வயல் வெளியெங்கும் பரவி 30 கல் தொலைவிலுள்ள முள்ளிப்பொத்தானை தம்பலகாமம் பரவிப்பாஞ்சான் முதலிய வயல்களுக்கும் பரவிப்பாயும். வாய்க்கால் நீளம் மக்கள் நீராடுவர். துணிகள் கழுவுவர். வற்றினால் குளத்தில் வலைவீசி மீன் (ஜப்பான் குறளி) பிடித்து விற்பனை செய்வதுண்டு. வாய்க்காலை பிரப்பங்கொடி – மொக்காட்டுக் கொடிகள் மூடி வெயிலை மறைப்பதால் நீர் குளிர்ச்சியாயிருக்கும். விசுவநாதர் வீட்டில் இருந்தவேளை வாய்க்கால் குளிப்பு வாய்த்ததுமுண்டு கரும்புத்தோட்டம் வந்ததால் சிலகாலம் வயல் நீர் குறைவுற்றது முண்டு. மழைபெய்யாமல் குளத்தில் நீர் குறைந்து வயல்கள் கருகி வாய்க்கால் வரண்டதும் உண்டு.

(3) போட்டங்காடு – கந்தளாய் தமிழர் பழம்பதி. அதில் போட்டங்காடு என்றோர் புத்தூர் தமிழ்க்குடி அருகி சிங்களக்குடியும். இஸ்லாம்குடியும் பெருகிக்காணப்பட்டாலும் மூவின. மக்களும் சச்சரவின்றி வாழ்வைக் கழிக்கின்றார்கள். பேருந்துப் போக்குவரத்துண்டு. கடைகள் உண்டு. பன்சாலை–கோயில்–மசூதி–பாடசாலைகள்–காவல்நிலையம்–பேருந்து நிலையம்–மடலகம்–பெற்றோல் நிலையம்–தொடருந்து

நிலையம்–கல்லரிநிலையம் யாவுமுண்டு $1\frac{1}{2}$ கல்தொலைவே பள்ளி போட்டங்காட்டிலிருந்து அவ் வீதியால் மூதூர் செல்லும் வசதிகளும் (வாய்க்கால் ஓரம்) உண்டு.

(4) கரும்பு – சீனி தொழிற்சாலை–கரும்பு–கந்தளாய்–மது என்றெல்லாம் திட்டமிட்டனர். வயல்களில் கரும்பை நட்டனர். குளநீர் திறந்து விட்டனர். கரும்பு ஏற்றம் பெற்றது. சிங்களக்குடியும் ஏற்றம் பெற்றது. கந்தளாய் ஊரே சிங்கள ஊராய் மாறிவிட்டது. பிறிமா மா ஆலை என்றனர். தானியகம சிங்கள ஊர் உருவானது. ஒவ்வொரு திட்டமிடலும் ஒவ்வொரு பின்னணியை வைத்தேதான். இனிப்புக்கரும்பு தமிழர்களுக்குக் கசப்பையே தந்தது. இன்று பழுப்புச்சீனியுமில்லை–கரும்புமில்லை. குடியேற்றம் உண்டு.

(5) குடியேற்றம் – சீனித்தொழிற்சாலை வேலைவாய்ப்பெனப் பல சிங்களவர் வேலை பெற்றனர்–குடும்பமாகினர் –குடியேறினர். தமிழ் நிலம்பறிபோனது. அம்பாறை (பட்டிப்பளை–பொன்னன்வெளி) போனது. சேருவலைபோனது. சிங்களத் தொகுதி வந்தது. பன்குளம் (மொறவேவா) போனது. பல இடங்கள் பறிபோயின. அதில் ஒன்று கந்தளாய், உலக்கை தேய்ந்து உளிப்பிடி ஆனது. கழுதைதேய்ந்து கட்டெறும்பு ஆனது எல்லாம் திட்டமிடப்பட்ட சிங்களக்குடியேற்றங்களே. நிலப்பறிப்பு இன்றுங் கூட நிகழ்ந்தவண்ணமே உள்ளது கேட்டால் தடுத்தால் பயங்கரவாதம்.

**தொடரும்**

எட்டுத்திசையும் பதினாறு கோணமும் எங்கும் ஒன்றாய்
முட்டித்ததும்பி முளைத்தோங்கு சோதியை மூடரெல்லாம்
கட்டிச்சுருட்டித்தம் கக்கத்தில் வைப்பர். கருத்தில்வையார்
பட்டப்பகலை இரவென்று கூறிடும் பாதகரே! (326)

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீ மனமே மாற்றிப்பிறக்க
வகையறிந்தாயில்லை மாமறை நூல்
ஏற்றிக் கிடக்கும் எழுகோடி மந்திரம் என்ன கண்டாய்?
ஆற்றில் கிடந்தும் துறையறியாமல் அலைகின்றையே!

(336)

**(பட்டினத்தடிகள்)**

# சித்தர்கள் யார்

-பேராசிரியர் என் கணபதி -

சித்தர்களைப் பற்றி ஆராயும் பொழுது ஓர் அடிப்படையான இடர்ப்பாடு எழுகின்றது. சித்தர்கள் என்ற சொல்லுக்குப் பொருள் காண்பதுதான் அது. அந்தச் சொல்லிற்கு ஒன்றுக்கொன்று தொடர்புடைய, சில சமயங்களில் ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்ற, பல பொருள்கள் இருக்கின்றன. அவை எல்லாமே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவையாக இருக்கவில்லை. அது ஒரு பொதுவான சொல். மெய்ஞ்ஞானத்தை மெய்யாகத் தேடுகின்ற எல்லோரையும் அந்தச் சொல் குறிக்கின்றது என்று சொல்லலாம். இருப்பினும், பொதுவாக வழங்கிவரும் சொல்லாட்சியில், மருத்துவம், வானியல், மாயவித்தை, இரசவாதம், தந்திர சாஸ்திரம், யோகம் போன்ற பொருள்களைப் பற்றிய நூல்களை இயற்றியவர்கள் சித்தர்கள் எனப்படுகிறார்கள் என்று சொல்லலாம். இவர்களைத் தவிர தமிழ்ச்சித்தர் மரபில் உள்ள அராபியர்கள், சீனர்கள் போன்ற வெளிநாட்டவர்களும் சித்தர்கள் எனப்படுகி றார்கள். ஆகையால் “சித்தர்” என்ற சொல்லிற்கு ஒரு பொதுவரையறை வழங்கிப் பொருளை விளக்கிவிட்டு நிறைவடைய வேண்டியதுதான்.

“சித்தர்” என்ற சொல்லிற்கு உள்ளார்ந்த வெவ்வேறான பொருள்கள் இருக்கின்றன. இந்த வடமொழிச் சொல்லுக்கு நிறைவடைந்தவன் என்று பொருள். சித்தர்கள் என்பவர்கள் ஒரு தெய்வ இனத்தைச் சார்ந்தவர்கள்; மகத்தான தூய்மையையும் தெய்விகத்தையும் கொண்டவர்கள். விண்ணிற்கும் மண்ணிற்கும் இடைப்பட்ட வானவெளியில் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்று டாசன் என்பவரின் Classical Dictionary of Hindu Mythology என்ற அகராதி நூல் குறிப்பிடுகிறது. தொல்காப்பியம் இவர்களை அறிவர் என்று அழைக்கின்றது. ரிக் வேதத்தில் “கேசின்” என்று குறிப்பிடப்படுபவர்களைச் சித்தர்களோடு இணைத்துக் கூறலாம். சித்தர்களை ஞானம் நிறைந்த சிந்தனைச் செல்வர்கள் என்று திருவாவடுதுறைப் புராணம் குறிப்பிடுகின்றது.

ஆன்மிக ஞானமும், தன்னை உணரும் மெய்யுணர்வும் சித்திக்கப் பெற்ற ஒருவரைச் சித்தர் என்று ஏற்கலாம். அவர் எல்லாம் நிறைந்தவர். எல்லாவற்றையும் சாதித்தவர், உலக மக்களுக்காகவும் மன்னுயிர்களுக்காகவும் உலகில் நடமாடிவரும்,

தெய்வக்காட்சி பெற்றவர். இந்திய நாட்டின் பூரணத்தூய்மைக்கும் நிறைவிற்கும் முன்னுதாரணமாக விளங்குபவர். சித்தர் என்ற சொல் குரு என்ற பொருளையும் தருகின்றது. இறைவனால் படைக்கப்பட்ட இவ்வுலகில் இறைவனோடு ஒன்றி வாழ்பவர்கள் சித்தர்கள். அவர்கள் மெயப்பொருளை மற்ற உயிர்களுக்கு வெளிப்படுத்தும் பொருட்டு வாழ்பவர்கள்.

தமிழர்கள் நான்கு வகையான முக்தி நிலைகளைக் குறிப்பிடுகிறார்கள். ஒன்று இறை உலகில் வாழும் நிலையினைக் குறிக்கும் சாலோக்கியம் என்பது. இரண்டாவது சாமீப்பியம். அதாவது இறைவனுக்கு அருகில் வாழும் நிலை. மூன்றாவது இறைவனின் வடிவத்தைப் பெறக்கூடிய சாரூப்பியம். நான்காவது சாயுஜ்யம். இது இறைவனோடு ஒனறி இணைந்து நிற்கும் நிலை. சித்தர்கள் எனப்படுபவர்கள் இந்த நான்காவது நிலையை எட்டி விட்டவர்கள். முதல் மூன்று முக்தி நிலைகளைப் பதமுக்தி என்றும் நான்காவதை சித்தி என்றும் திருமூலர் குறிப்பிடுவதைக் காண்கிறோம். (திருமந்திரம், பா. 2525), சாயுஜ்ய நிலை எனப்படும் சித்தி என்பது ஞானத்தால் அடையப்படக்கூடியது. இந்த சித்திகைவரப் பெற்றவர்களே சித்தர்கள். இறைமையைச் சச்சிதானந்தம் என்று சொல்வது வழக்கம். இங்கு “சித்” என்பது யாதும் அறியும் ஞானம். அந்த ஞானத்தைப் பெற்றிருப்பதே சித்தி. சித்தர் என்று வரையறுத்துப் பேசும்பொழுது அது எல்லாம் உணரும் ஞானத்தைப் பெற்ற ஒருவரைத்தான் குறிக்கின்றது. சிவவாக்கியர் சித்தர்களை “விகாரமற்ற ஞானிகள்” என்று குறிப்பிடுகின்றார். (சிவவாக்கியர் பா. 390) சித்தினை, அதாவது, ஞானத்தைச் சிக்கெனப் பற்றிக்கொண்டு வாழ்பவன் சித்தன்.

சிந்தை தெளிந்திருப்பான் அவனே சித்தன்

**(வால்மீகர் ஞானம், பா. 2)**

சிந்தை தெளிந்தார் சித்தர் (திருமந்திரம், பா, 1989)

சித்தர்களை “விதக்தர்கள்” (வெந்து பக்குவப்பட்டவர்கள்) என்பார்கள். அதாவது, ஞானத்தைக் கைக்கொள்ளப் பக்குவப்படுத்தப்பட்டவர்கள் என்று பொருள். அலையில்லாது தெளிந்து துலங்கும் கடலைப்போல் தெளிவான அமைதியான மனநிலையை உடையவனே சித்தன் என்பார் திருமூலர் (திருமந்திரம், பா. 2955) அண்டம், பிண்டம் இரண்டும் ஒருநிலைப்பட்ட ஒன்றே என்பதை உணர்ந்து, அந்த ஒருமையைத் தன்னுள் அனுபவிக்கும் ஒருவனே உண்மையான சித்தன் என்று திருமூலர் மேலும் கூறுகிறார். **(திருமந்திரம், பா. 124)**

பிரபஞ்சம் அனைத்தையும் சிவமாகக் காண்பவனே சித்தன் என்பார் வால்மீகர் (வால்மீகர் ஞானம், பா. 2) துரியத்தில் அகமுகமாகப் பெற்ற ஞானத்தைத் திருமூலர் "சொருகிக் கிடக்கும் துறை" என்று குறிப்பிடுகிறார் (திருமந்திரம், பா. 1987) இந்த அகமுகநிலையை அடைந்தவர்களே சித்தர்கள் ஆவார்கள்.

சித்தர்களுக்கெல்லாம் ஆதியாக விளங்குபவர் சிவபெருமான்தான் என்று தமிழ்நாட்டில் சித்தர்களிடையே ஒரு சம்பிரதாயம் உண்டு. சிவபெருமானே ஒரு சித்தர் ஆவார். திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் திருஞானசம்பந்தர் பாடிப் புகழந்திருக்கிறார். அந்தத் தலத்திற்குத் தற்பொழுது சித்தீச்சரம் என்றுபெயர். அத்தலத்தின் பெருமான் சித்தன் என்றே அழைக்கப்படுகிறார். (தேவாரம், 1-29-1, 1-29-11). மதுரை மீனாட்சி கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெருமானை "எல்லாம் வல்ல சித்தர்" என்று அழைப்பார்கள். மேலும் கைலாய பரம்பரையில் வந்தவர்கள் என்று தமிழ்ச் சித்தர்கள் தங்களை அழைத்துக் கொள்வார்கள். இதன்மூலம் அவர்கள், சிவபெருமானே தங்கள் குரு என்றும் தாங்கள் எல்லாம் அவருடைய வழித்தோன்றல்களே என்றும் உய்த்துணர வைக்கிறார்கள். (உமாபதி சிவாச்சாரியார், திருத்தொண்டர் புராண சாரம்; மேலும் காண்க, கம்பளிச்சட்டைமுனி பின்ஞானம் - 100, பா. 1) சிவபெருமானின் அனுபூதியைப் பெறுவதே சித்தியாகும். சித்தர் என்ற சொல் அந்த அடிப்படையில் தோன்றியதே. சித்தீஸ்வரன் என்பது சிவபெருமானின் ஒரு பெயராக விளங்குகிறது.

சிவனுக்கும் சீவனுக்கும் இருக்கும் அபேதத்தை உண்மையாக உணர்பவனே சித்தன்.

**அவன் சிவன் தெரிந்த ஞானி** **(சிவபாக்கியர், பா.110)**

அப்பர் பெருமானின் கருத்தை ஒட்டித் தன் சிந்தையிலும் வாழ்விலும் சிவமாகவே ஆகிவிட்ட ஒருவன்தான் சித்தன் எனலாம் (சிந்தையில் சிவமதனார்) தன்னைச் சிவமாக மாற்றிக் கொண்டவனே சித்தன் (காரைச்சித்தர், பா. 89) ஒருவன் தன்னைச் சிவமாக ஆக்கிக்கொள்வதற்கு உலகுயிர்கள் அனைத்தையும் சிவமாகவே கருதவேண்டும். சிந்தனை முழுதும் சிவமாகிச் சிவத்தின் ஆலயமாகும் ஒரு நிலையைப் பற்றித் திருமூலர் குறிப்பிடுகிறார்.

**சித்தம் புகுந்து சிவமய மாக்குமே** **(திருமந்திரம், பா. 492)**

சித்தத்தில் சிவலிங்கத்தைக் காட்டுபவரே சித்தர் எனப்படுவர் என்று ஔவையார் தமது விநாயகர் அகவலில் குறிப்பிடுகின்றார். (பாடல் வரி –64) மேலும் சிவானுபவத்தை பெற்ற ஒருவரே சித்தர் ஆவார்.

**சித்தர் சிவத்தைக் கண்டவர்** **(திருமந்திரம் பா. 2526)**

அவ்வாறு சிவத்தைக் கண்டவர்கள் சிவசித்தர்கள் (திருமந்திரம், பா124, 2525) சிவானுபவம் என்பது சிவனுக்கும் சீவனுக்கும் உள்ள அபேதத்தை சிவ – சீவ ஐக்கியத்தை உணர்த்தும் அனுபவமேயாகும்.

**சிவமான சிந்தையிற் சீவன் சிதைய** **(திருமந்திரம் , பா. 2539)**

சித்தர் என்பவர் ஒரு யோகி ஆவார். யோகத்தில் நின்று யோகத்தின் வழியாகத் தெய்வீக சக்தியையும் பேரொளியையும் காண்பவர்களே சித்தர்கள் எனப்படுவார்கள் என்று திருமூலர் கூறுவார்.

**யோகச் சமாதி உகந்தவர் சித்தரே** **(திருமந்திரம், பா.. 1490)2**

குண்டலினியாகிய மகத்தான சக்தியை எழுப்புவதன் வாயிலாகப் பூரணத்தை அடைபவனே சித்தன். தன்சுய முயற்சியால் பூரணத்தை அடைய சுயசோதனை செய்யும் யோகியே சித்தன். இதனை, போதியாமல் தம்முள்ளே பெற்றுணர்ந்த ஞானி என்கிறார் சிவவாக்கியர் (பா. 211) எனவே தன்னுடைய ஆன்மிக வழிநடப்பில் ஒவ்வொரு நிலையிலும் தோன்றும் அனுபவத்தை அவனால் பிறருக்கு எடுத்துச்செல்ல முடியும். இதனை, குண்டலினி யோகத்தின் ஆறு ஆதாரங்களைப் பற்றி விளக்குவதன் மூலம் தமிழ்ச் சித்தர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள்.

தந்திர இலக்கியத்தில், தாந்திரிகர்கள் – சமயிகள், கௌலர்கள் என்று இருசாராராக இருக்கின்றார்கள். யோகத்தின் வாயிலாகக் குண்டலினியை எழுப்பி இறைமையைஅடைதல் சமயிகளின் செயற்பாடு. கௌலர்கள் குண்டலினியைப் பல்வேறு சடங்குகளால் தொழுது வணங்குகிறார்கள். தமிழ்ச் சித்தர்ககள் யோகவழியை நாடும் முதலாவது வகையைச் சார்ந்தவர்கள். அவர்களது நோக்கம் நமக்குள் இருக்கும் மிகப்பெரிய சக்தியான குண்டலினியை எழுப்பி முக்தியை, மோட்சத்தை அடைவதேயாகும். எனினும் சில சித்தர் பாடல்களில், குண்டலினியை வழிபடுபவன் சித்தன் என்ற கருத்தும் காணப்படுகிறது.

**வாலையை பூசித்தவன் சித்தன்** (கொங்கண நாயனார், பா. 74)

**ஆத்தாளைப் பூசித்தோன் அவனே சித்தன்** (கருவூரார், பா. 18)

யோகிகள் என்ற வகையிலே சித்தர்களிடம் மூன்று வகையான அடக்கங்கள் உள்ளன. அவை மூச்சை அடக்குதல், விந்துவை அடக்கிக் காமத்தை வென்று, எப்பொருளிலும் ஆசையற்ற நிலையைப் பெறுதல், இறுதியாக மனத்தை அடக்குதல் ஆகியவையேயாகும். இம்மூவகை அடக்கங்களையும் யுகநத்தம் (Yuganaddha) என்பார்கள். சித்தன் என்பவன் இந்த அடக்கங்களை நிலைநிறுத்துவதில் வெற்றி கண்டு சமநோக்கையும் சமநிலையையும் தன்னுள் ஏற்படுத்திக் கொள்பவன் ஆவான்.

சித்தியை அடைந்தவனே சித்தன். சித்தி (siddhin) என்பது மனோ ரீதியான ஆன்மீக சக்தி. யோக சாஸ்திரத்தில் சித்திகள் எட்டு வகையாக உள்ளன. அவை பின்வருமாறு.

1. அணிமா – அணுவைப்போல சிறுத்து நிற்கும் ஆற்றல்
2. மகிமா – வரையறையற்று விரிந்து படரும் ஆற்றல்
3. லகிமா – காற்றில் மிதக்கும் ஆற்றல்
4. கரிமா – எங்கும் வியாபித்திருக்கும் ஆற்றல்
5. பிராகாமியம் – சிந்தனைச் சுதந்திரம் அல்லது இயற்கைத் தடைகளைக் கடக்கும் ஆற்றல்.
6. ஈசித்வம் – படைக்கவும், அடக்கவும் கொண்ட ஆற்றல்
7. வசித்வம் – உலகப் படைப்புகளையெல்லாம் அடக்கி ஆளும் ஆற்றல்
8. காமாவசத்வம் – விரும்பியதை முடிக்கும் ஆற்றல் அல்லது விரும்பியதை யெல்லாம் அடையும் திறமை முடிவில் விருப்பமின்மையை அடையும் நிலையைப் பெறுதல்.

யோகத்தைப் பயில்பவர்கள், முக்தியாகிய இறுதி நிலையை அடைவதற்குரிய பக்குவத்தை அடைந்து விட்டதைக் குறிக்கும் ஒரு சாதனமாகவே சித்தி அமைந்துள்ளது எனலாம். சித்தர்களை மந்திரவாதிகள் என்றோ இயற்கைக்கு மீறிய சக்திகளைக் கொண்டுள்ள விகாரமான துறவிகள் என்றோ நினைப்பது தவறாகும். சித்தனுக்கும் பித்தனுக்கும் வேறுபாடு தெரியாது மாந்தர் மயங்குகிறார்களே என்று வருந்தியிருக்கிறார் சிவவாக்கியர். (சிவவாக்கியர், பா. 506) யார் சித்தர் இல்லை என்பதையும் அவர் தெளிவாகக் கூறுகிறார். (பா.516) சித்தர்கள் உண்மையில்

மெய்ப்பொருளை நாடும் பக்குவமுற்ற ஞானிகள் ஆவார்கள். பொத்தாம் பொதுவாகச் சிலர் கூறுவதைப்போல் அவர்கள் நாத்திகர்களோ, கடவுளை நம்பாதவர்களோ அல்லர். அவர்கள் கடவுளை நம்புகிறவர்கள் ஆனால் மதங்கள் கூறுகிற கடவுளை அவர்கள் ஏற்பதில்லை. சித்தர்களில் பெரும்பான்மையோருக்குக் கடவுள் என்ற ஒருவர் – சிவன் – இருக்கிறார். ஆனால் வரையறுக்கும் குணாதிசயங்களுக்கும் உட்பட்ட கடவுளை அவர்கள் ஏற்பதில்லை. சிவம் என்பது இலக்கணரீதியாகவும் தத்துவரீதியாகவும் தனிநிலை சாராத ஒரு மெய்ப்பொருளைத்தான் உணர்த்துகிறது எனலாம். சிவத்திற்கு மெய்யான பெயர் "அது", "அத்தகையது", "அப்படிப்பட்டது" என்பதுதான். காரை சித்தர் கூறுவார்.

அரனைப்பாடி உயர்ந்திட்டார் அறுபத்து மூவர்
அருளைப்பாடி மிகுந்திட்டார் அருட் பெருஞ்சோதி
அரியைப் பாடிச் சிறந்திட்டார் ஆறிரண்டாழ்வார்
அதனைப் பாடி நிறைந்திட்டார் அறுமூன்று சித்தர் (பா. 78)

மெய்யான ஒரு சித்தன் நாத்திகவாதத்திற்கும் ஆத்திக வாதத்திற்கும் அப்பாற் பட்டவன்.

சித்தன் என்பவன் ஒரு தெளிவான சிந்தனையாளன். ஒரு சமயத்தையோ ஒரு சமய நூலையோ சடங்குகளையோ சார்ந்த கருத்துகளால் பாதிக்கப்பட்ட மறுக்கும் புரட்சிக்காரன் சித்தன். சாத்திரங்களைப் பொசுக்கி நிற்பவன் தான் சித்தன்.

**நன்றி தமிழ்ச்சித்தர் மரபு.**

**'அறிவு' வாசகர்களுக்கு**

- அறிவு சஞ்சிகை பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை
- உங்கள் ஆக்கங்கள்
- நீங்கள் வாசித்து மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்பும் விடயங்கள் முழு விபரங்களுடன்.

என்பவற்றை அனுப்பி வையுங்கள்
அறிவு இல் பிரசுரிக்க.

**– ஆசிரியர் குழு –**

# உங்களுக்கு உதவும் மூன்று 'ந' முறைகள்

**Dr. எம். ஆர். கொப்மேயர்**

நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்து உங்களை பிரபலமாக்கும், வெற்றி தரும் மகிழ்ச்சி அளிக்கும்.

நீங்கள் பிரசித்தி அடைய விரும்பினால் மக்கள் மத்தியிலேயே பிரசித்தி பெற வேண்டும். அதுதான் உண்மையான பிரபலம்.

நீங்கள் வெற்றியடைய விரும்பினால் மக்களிடம் நீங்கள் வெற்றி பெற வேண்டும். நீங்கள் தனியாக ஒரு இடத்தில் பூமியைத் தோண்டி தங்கம் கண்டு பிடித்தாலும் மக்கள் தான் அந்த தங்கத்தின் மதிப்பைத் தீர்மானிக்கப் போகிறார்கள். விலை கொடுத்து அதை வாங்கப் போகிறார்கள்.

வியாபாரத்திலும் மற்ற உங்கள் எல்லா முயற்சிகளிலும் மக்களின் எதிர்கொள்ளலே உங்கள் வெற்றியை நிர்ணயிக்கும். உங்களை வெற்றிப்படிகளில் ஏற்றப் போகிறவர்கள் பிற மனிதர்களே. உங்கள் பளுவை நீங்கள் குறைத்துக்கொண்டு மற்றவர்கள் உங்களைத் தூக்கி விட நீங்கள் அவர்களுக்கு உதவ வேண்டும்.

நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்க விரும்பினால் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும். தனிப்பட்ட மகிழ்ச்சி ஆழமற்றது; பூரண திருப்தி அளிக்காது. அப்படி மகிழ்ச்சி அடைந்ததாகச் சொல்லிக் கொள்பவர்களைக் கேட்டுப் பாருங்கள்.

பிற மனிதர்களின் சகவாசமும் அவர்கள் நேசமுமே உங்களுக்கு முழுத் திருப்தி தரும் மகிழ்ச்சியை அளிக்கும்.

மனிதர்கள் மத்தியில் பிரபலமாக வெற்றி அடைய மகிழ்ச்சி அடைய வழிகளை இந்த அத்தியாயம் உங்களுக்குச் சொல்லித்தரும்.

ஆழ்ந்த திருப்தி தர ஒரு எளிய, சுலபமான நிரூபிக்கப்பட்ட வழியை நான் உங்களுக்குச் சொல்லித்தருகிறேன்.

"ந" என்ற எழுத்தில் தொடங்கும் மூன்று குணங்களை நீங்கள் போற்றிப் பின்பற்ற வேண்டும்.

. அந்த மூன்று – 'ந'க்கள் இங்கு தரப்படுகின்றன. பிறருடன் நேரில் பழகும் போது, தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்போது, பிறருக்குக் கடிதம் எழுதும்போது நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று வழிமுறைகள்.

1. **எப்பொழுதும் நன்றி சொல்லுங்கள்.** இது மிகச் சுலபம். தொடர்ந்து பழக்கத்திற்குக் கொண்டு வந்து விடலாம். பிறர் உங்களுடன் பேச நேரம் ஒதுக்கினால், உங்கள் கடிதத்தை படித்துப்பார்க்க ஒப்புக்கொண்டால் உங்கள் சிறு தேவையை பூர்த்தி செய்தால் எதற்கும் நீங்கள் நன்றி சொல்வதைப் பழகிக் கொள்ளுங்கள். பின்னால் பெரிய விஷயங்களுக்கும் இது உதவும். எப்பொழுதும் நன்றி சொல்பவராக உங்களை பிறர் அறியட்டும்.

மனிதர்கள் அடிமனத்தில் பிறரால் பாராட்டப் படுவதை விரும்புகிறார்கள். நீங்கள் நன்றி சொல்லும்போது அவர்களின் உள்மனத் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. எனவே இது நட்பை வளர்ப்பது மட்டுமன்றி, ஆழமான, நிரந்தரமான பலனைத் தருகிறது.

2. **எப்பொழுதும் நல்லெண்ணத்தைத் தெரியப்படுத்துங்கள்.**

உங்கள் நல்லெண்ணத்தை உங்கள் நண்பர்களோ, ஏன் குடும்பத்தினரோ கூட அவர்களாகவே புரிந்து கொள்வார்கள் என்று விட்டு விடாதீர்கள். அவர்களிடம் உங்கள் நல்லெண்ணத்தைச் சொற்களால் தெரியப்படுத்துங்கள். செயல் வடிவாக நல்லெண்ணத்தை அடிக்கடி எடுத்துக்காட்டுவதும் அவசியம். ஒவ்வொரு வாய்ப்புக் கிடைக்கும் போதும் சொல்லிக்காட்டுவது அதை விட முக்கியம்.

உங்களைச் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும், தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு நபரிடமும், கடிதம் மூலம் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு நபரிடமும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துங்கள். அது உங்கள் வாழ்க்கையில் மந்திரம் போல உதவும்.

3. **நல்வாழ்த்துக்களை எப்பொழுதும் கூறியவண்ணம் இருங்கள்**

நீங்கள் பிறர் நல்லபடியாக வாழ்வதை விரும்புகிறீர்கள் என்பதை அவர்கள் தாங்களாகவே உணருவார்கள் என்று விட்டு விடாதீர்கள்.

உங்கள் நல்வாழ்த்துக்களை நீங்கள் கூறத் தவறினால் நீங்கள் அவர்களை அலட்சியம் செய்கிறீர்கள் என்று பிறர் உள்மனத்தில் நினைத்துக் கொள்வார்கள். உங்கள் மீதும் அவர்கள் அலட்சிய பாவம் காட்டத் தலைப்படுவார்கள்.

நீங்கள் நேரடியாகச் சந்திக்கும் நபர்களிடம் உங்கள் நல்லெண்ணத்தை

நல்வாழ்த்துக்களை தெரியப்படுத்துவதோடு உங்கள் ஆளுமை வட்டத்திற்குள் ஆட்படுத்த வேண்டிய நீங்கள் இதுவரை சந்திக்காத நபர்களுக்கும் **மனத்தளவில்** நல்வாழ்த்துக்களை நல்லெண்ணத்தை ஒலிபரப்பிய வண்ணம் இருங்கள்.

உடனடியாக நீங்கள் மூன்று – "ந" வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்

1. எப்பொழுதும் **நன்றி** தெரிவியுங்கள்
2. எப்பொழுதும் **நல்லெண்ணத்தைத்** தெரியப்படுத்துங்கள்
3. எப்பொழுதும் **நல்வாழ்த்துக்கள்** கூறிய வண்ணம் இருங்கள்.

இது உங்களைப் பிரபலப்படுத்தும், வெற்றிக்கு வழிவகுக்கும். மகிழ்ச்சி ஏற்படுத்தும். மேலும், நல்ல விளைவுகள் இதனால் ஏற்படும்.

இது உங்களைப் பணக்காரருக்கும். கடந்த நாட்களில் நான் நிறைய வியாபார முயற்சிகளைக் கை தவற விட்டேன். ஏனென்றால் நான் எப்பொழுதும் நன்றி சொல்ல நல்லெண்ணம் தெரியப்படுத்த நல்வாழ்த்து கூறத் தவறினேன். சரியான நேரங்களில் சரியான நபர்களுக்குச் சரியான சந்தரப்பங்களில் நான் இவற்றைக் கூறியிருந்தால் நான் எப்போதோ பணக்காரனாகி இருப்பேன்.

இது சிறிய விஷயமன்று ; மிக முக்கியமான பெரிய விஷயம்

உங்களுக்கும் இதை நான் சிபாரிசு செய்கிறேன்.

**ஒவ்வொரு** சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு நபரிடமும் நீங்கள் நன்றி, **நல்லெண்ணம், நல்வாழ்த்துக்கள்** இவற்றைத் தெரியப்படுத்த வேண்டும்.

தொடர்ந்து செய்யும் போது இது நல்ல பழக்கமாகும். உங்கள் ஆளுமைக்கு மெருகூட்டும். உங்கள் வாழ்நாள் பூராவும் நீங்கள் பிரபலமாக வெற்றியடைய, மகிழ்ச்சி பெற வழிவகுக்கும்.

நீங்கள் எல்லா நபர்களிடமும் **நன்றி, நல்லெண்ணம், நல்வாழ்த்துகள்** சொல்லும் போது எல்லாரிடமும் மகிழ்ச்சியைப் பரப்புகிறீர்கள். உங்களுக்கு ஆதாயம் விளைவிக்காத நபர்களும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

சுயலாபம் கருதாமல் நீங்கள் இந்த நல்ல பழக்கத்தை மேற்கொள்ளும் போது பலன்கள் தானே வந்து அமையும்.

நீங்கள் விதைப்பது எதுவோ, அதையே அறுவடை செய்யக் கடவீர்கள்.

**நன்றி – இதோ உதவி!**

# நன்றி மறவாமை

– சுவாமி கெங்காதரானந்தா –

பஜனை எதற்காக? சத்சங்கம் எதற்காக? ஆலயங்களுக்குச் சென்று வழிபடுவது எதற்காக? இறைவனிடம் எமது வேண்டுதல்களைக் கூறுவதற்கு மாத்திரமல்ல, உலகியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மாத்திரமல்ல, நமது தீய குணங்களை நீக்கி, நல்லவர்களாக வாழ வேண்டும் என்ற எண்ணமும் இருக்கவேண்டும். இந்த எண்ணம் ஓயாது மனதில் எழும் பட்சத்தில், அது தானாகவே நாளடைவில் மாறிவிடும். மனிதனிடமுள்ள இரண்டு தீய குணங்களில் ஒன்று நன்றி மறத்தல், மற்றது பேராசை இந்த இரண்டையும் ஒருவன் அழிக்க முடிந்து விட்டால் அவனது ஆத்மா தானாகவே உயர்ந்து விடும்.

ஓர் ஊரில் ஏழ்மையான ஒரு கிரகஸ்தன் மிகவும் கஷ்டப்பட்டு, துன்பப்பட்டு, மனக்கிலேசப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அவனுக்கு ஒரு எண்ணம் உண்டானது. தான் தேச சஞ்சாரமாகச் சென்று, தீர்த்த யாத்திரை செய்து, பல ஸ்தலங்களைத் தரிசித்து வழிபட்டு வந்தால் மனக்கிலேசம் தீரும் என்பதாகும். தனது எண்ணத்தை மனைவியிடம் கூறினான். தீர்த்த யாத்திரை சென்று பல ஸ்தலங்களையும் தரிசித்து வழிபட்டு வருவதனால் நமது குடும்பக் கிலேசங்கள் எல்லாம் தீரும் என்று நீங்கள் கருதுவதானால் என்னுடைய அன்பும் ஒத்துழைப்பும் உங்களுக்கு உண்டு. ஆனால் ஒன்று மட்டும் நான் கூறுகின்றேன். "கொடிய சர்ப்பங்களை நம்பினாலும், துஷ்ட மிருகங்களை நம்பினாலும், கொடூரமான ஜீவன்களை நம்பினாலும், மனிதனை மட்டும் நம்ப வேண்டாம்" என்று கூறி விடை கொடுத்தாள்.

அந்தக் கிரகஸ்தன் தேச சஞ்சாரமாக நீண்ட பயணம் சென்று கொண்டிருந்த நேரத்தில், வழியில் பாழடைந்த கிணற்றிலிருந்து பெரிய அலறல் சத்தம் கேட்டது. கிணற்றை எட்டிப்பார்த்த பொழுது, அதற்குள் சில உயிர்கள் தவித்துக் கொண்டிருப்பதைக் கண்டார் அந்தப் பாழ் கிணற்றுக்குள் ஒரு மனிதன், பாம்பு, குரங்கு, புலி எல்லோரும் தங்கள் உயிரைப் பாதுகாக்கும் படி உதவி கேட்டார்கள்.

தன்னுடைய உடுதுணியைத் திரித்து கீழை இறக்கி, முதலில் குரங்கை மேலே எடுத்துப் பாதுகாத்தார். குரங்கு மேலே வந்ததும் தனக்கு உதவிய கிரகஸ்தன் மேலுள்ள நன்றிப் பெருக்கினால், "நீங்கள் தேச சஞ்சாரத்தை முடித்துக் கொண்டு திரும்புகிற நேரத்தில் நான் இருக்கும் இடத்திற்கும் வந்து செல்லுங்கள். நீங்கள் செய்த

நன்றிக்கு பதில் உபகாரம் செய்வதற்குக் காத்திருக்கின்றேன். எல்லோரையும் காப்பாற்றுங்கள். உள்ளே இருக்கும் மனிதனை மட்டும் காப்பாற்றி விடாதீர்கள் என்று கூறியது.

அடுத்து சர்ப்பத்தை மேலெடுத்துக் காப்பாற்றிய பொழுது சர்ப்பம் கூறியது: நீங்கள் செய்த உதவிக்கு நன்றிக்கடனாக எப்பொழுதாகினும் அத்தியாவசிய தேவையுள்ள ஒரு இக்கட்டான நேரத்தில் என்னை நினைத்தீர்களானால், உங்களுக்கு முன் பிரத்தஷமாகி உங்களைக் காப்பாற்றுவேன்" என்றது.

சர்ப்பத்திற்குப்பின் புலியை மேலேடுத்துக் காப்பாற்றினார். புலி கூறியது "சகோதரா நீ தேசசஞ்சாரம் செய்து முடித்து திரும்புகின்ற பொழுது என்குகைக்கு வந்து என்னைப் பார்த்துச் செல்ல வேண்டும். நான் கொடிய துஷ்டமிருகமானாலும் கூட, நீ செய்த இந்த உதவிக்கு நான் நன்றி செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன் என்றது.

அவர்களிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு கிரகஸ்தன் புறப்பட ஆயத்தமான பொழுது, கிணற்றுக்குளிருந்த மனிதன் அலறத் தொடங்கி விட்டான். "உன்னைப் போன்ற ஒரு சகஜீவியை நீ இப்படி விட்டுச் செல்வது பண்பா–இது தர்மமாகத் தெரிகிறதா என்று தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினான். கிரகஸ்தன் தனது மனைவி கூறியதை நினைத்து, சிறிது தயங்கி நின்று விட்டு, அந்த மனிதனையும் கரையேற்றி விட்டான்.

அவன் ஒரு வர்த்தகன், பெருஞ் செல்வந்தன்; தேச சஞ்சாரத்திற்குப் பின் எனது தேசத்திற்கும் வந்து செல்ல வேண்டும். நீங்கள் செய்த இந்த நன்றிக்கு என்னிடத்திலுள்ள செல்வத்தில் ஒரு பங்கை உங்களுக்குத் தந்து மகிழ்விக்க வேண்டும் என்று கூறினான். கிரகஸ்தன் பல ஸ்தலங்களையும் தரிசித்து, தீர்த்தாடனம் செய்து தனது தேச சஞ்சாரத்தை முடித்துக் கொண்டு குரங்கு வசிக்கின்ற வனாந்திரத்திற்குச் சென்றான். அவரைக் குரங்கு மிகவும், அன்பாக வரவேற்று உபசாரம் செய்தது. அதனிடத்தில் கொடுப்பதற்கு கனிகளைத் தவிர வேறு ஒன்றும் இருக்கவில்லை. மிகச் சிறந்த பழங்களை எல்லாம் பறித்தெடுத்து, ஒரு முடிச்சில் கட்டிக் கொடுத்து, மகிழ்ச்சியுடன் அனுப்பி வைத்தது. அங்கிருந்து புலி வசிக்கும் குகைக்குச் சென்றார்.

புலி மிகவும் சந்தோஷப்பட்டு உபசரித்து, தன்னால் இயன்றளவு நன்றியைக் காண்பிக்க யோசித்து அந்த வனாந்திரத்திற்கு மன்னர்கள் வேட்டையாட வருகின்ற பொழுது, அவர்களைக் கொன்று உண்டுவிட்டு, அவர்கள் அணிந்திருந்த மிக விலையுயர்ந்த வைரங்கள் பதித்த ஆபரணங்களைச் சேகரித்து புலி வைத்திருந்தது.

தான் சேகரித்து வைத்திருந்த பெறுமதி வாய்ந்த வைர ஆபரணங்களை தேச சஞ்சாரியிடத்தில் கொடுத்து "இதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று மகிழ்ச்சியுடன் கையளித்தது.

தேச சஞ்சாரியும் அவற்றை வாங்கிக் கொண்டு காடு வனாந்திரங்களைக் கடந்து செல்வந்தன் வசிக்கும் தேசத்திற்குச் சென்றான். செல்வந்தன் கிரகஸ்தனைக் கண்டவுடன் சந்தோஷப்பட்டு வரவேற்று, ஓரிரு நாட்கள் என்னுடன் இருந்து செல்வது சரியல்ல; என்னுடன் சில வாரங்களாவது தங்கிச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். கிரகஸ்தனும் அதற்கு ஒப்புக் கொண்டு அங்கு தங்கினார்.

ஒரு நாள், அவன் தீர்த்தாடனம் முடித்துக் கொண்டு வருகின்ற வழியில் புலி, குரங்கு இவர்களைச் சந்தித்த சரித்திரங்களைக் கூறி, புலி கொடுத்தனுப்பிய நகைகளையும் காண்பித்தார். வர்த்தகன் மிகவும் புத்திசாலி . மன்னர்களைக் கொண்டு ஒரு புலி ஆபரணங்களைப் பறித்து வைத்திருக்கின்றது என்ற செய்தி அவன் முன்பே அறிந்திருந்தான்.

மன்னனிடத்தில் சென்று இவன் ஏராளமான நகைகளைத் திருடி வைத்திருக்கிறான் என்று அறிவித்தால், தனக்கும் மன்னனுக்கும் இடையில் நெருக்கமான நட்புக் கிடைக்கும், பெயரும் புகழும் சன்மானமும் கிடைக்கும் என்ற நன்றி கெட்ட செயலாக மனதில் எண்ணி, உடனே மன்னனிடத்தில் சென்று அறிவித்தான்.

மன்னன் ஆபரணங்களை வந்து பார்த்தபொழுது அவை அரண்மனை ஆபரணங்களாகவும் இருக்கக் கண்டான். இவைகளைத் திருடிய திருடனுக்கு இரு வாரங்களின் பின் மரண தண்டனை விதிக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டான். இந்தச் செயலைப்பார்த்த தேச சஞ்சாரி பதட்டப்பட்டான். தான் துன்பப்படும் வேளையில் தன்னை நினைக்கும்படி கூறிய சர்ப்பத்தை நினைத்துத் தியானித்தான். அது அவன் முன் பிரத்யக்ஷமாகத் தோன்றியது.

"மன்னன் தனது அரசிமார்களில் இளைய மனைவி மேல்தான் மிகவும் விருப்பம் வைத்திருக்கின்றார். இன்று நான் மன்னனுடைய இளைய மனைவியைத் தீண்டுகின்றேன். எவரும் அவளுடைய உடலிலுள்ள விஷத்தை இறக்கிவிட முடியாது. நீ எப்பொழுது என்னை நீ நினைத்துத் தியானித்து அவளைத் தீண்டுகிறாயோ, அப்பொழுது அவள் எழுந்து விடுவாள். இரு நாட்களின் பின் நான் மன்னன் கனவில் தோன்றி, "நீ மரண தண்டனை விதித்திருக்கும் தேச சஞ்சாரியைக் கொண்டு தான்

மனைவியை எழுப்ப முடியும்" என்று கூறுவேன், என்று சர்ப்பம் கூறியது.

அதன்படியே இளைய மனைவியை சர்ப்பம் தீண்டியது அந்தத் தேசத்திலுள்ள விஷக்கடி வைத்தியர்கள், வல்லுனர்கள் எல்லோரும் வந்து சிகிச்சை அளித்தும் விஷத்தை இறக்க முடியவில்லை. இரண்டாம் நாள் மன்னனுடைய கனவில் சர்ப்பம் தோன்றி, மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் தேச சஞ்சாரி ஒருவனால்தான் உனது மனைவியிலுள்ள விஷத்தை நீக்கி எழுப்ப முடியும் என்று கூறியது. மன்னன் உடனடியாக தேச சஞ்சாரியிடம் வந்தார். எனது மனைவியை விஷம் இறக்கி எழுப்பிக் கொடுத்தால் இந்தத் தேசத்தில் அரைவாசியையும், எனது மகளையும் கொடுப்பேன் எனக் கூறினார்.

உடனே தேச சஞ்சாரி சர்ப்பத்தை நினைத்துத் தியானித்து மனைவியை எழுப்பிக் கொடுத்தார். "மன்னா! எனக்கு அழகான மனைவி ஒருத்தி இருக்கிறாள். ஆகையினால் உங்கள் மகளை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று மறுத்து, தனக்கு நடந்த உண்மைகளைக் கூறினான். நான் சத்தியமாக உங்கள் பொருளை அபகாரம் பண்ணவில்லை. என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய அந்த மனிதனுக்கு, அவன் நினைத்து உணரும்படியான தண்டனையைக் கொடுக்க வேண்டும்" என்று வேண்டினான். மன்னன் வர்த்தகனுக்கு அதற்குரிய தண்டனையைக் கொடுத்துத் தண்டித்தான்.

சமுதாயத்தில் ஒரு பழமொழி வழக்கத்தில் இருந்து வருகின்றது. "பாம்புக்கு பால் வார்க்காதே" மரணத்தையே விளைவிக்கின்ற பாம்புக்கு பால் வைக்கிறோம். பழம் கொடுக்கிறோம். ஆனால் இவையெல்லாம் செய்தும் பால் பழத்தைப் புற்றுக்கு உள்ளே கொண்டு போய் வைப்பதில்லை ஏன்? கையைக் கொத்தி விடும். புற்றுக்கு வெளியே தான் வைக்கிறோம்.

மனிதனிடத்தில் நன்றி கெட்ட சுபாவம் இருந்தாலும், சர்ப்ப குணங்கள் இருந்தாலும், பாம்புக்கு புற்றுக்கு வெளியே நிவேதனம் பண்ணுவது போல், உதவிகள் செய்து மகிழ்ந்து இருக்கத்தான் வேண்டும். மனிதனோடு சேர்ந்து வாழ வேண்டும். மனிதனுக்கு பரோபகாரம் செய்ய வேண்டும். எது போல என்றால் – புற்றுக்கு வெளியே வைக்கும் பால் போல இதைக் கருத்தில் வைத்துக் கொண்டு சமுதாயத்தோடு இணங்கி வாழ்ந்தால், எமது கருமத்தில் சித்தி பெற்று, இறைவனுடைய அருட்பொழிவை அடையும் வண்ணம் மனம் விசாலமடையும்.

**–தா. சியாமளாதேவி எழுதிய**

**அமிர்தவர்ஷம் என்ற நூலிலிருந்து தொகுத்தது**

# கம்ப்யூட்டர் நேற்று–இன்று–நாளை

– மு. சிவலிங்கம், கணிப்பொறி கல்வியாளர் சென்னை

## இணையம் வழித்தகவல் தொடர்பு.

மரபுவழித் தகவல் தொடர்பு அஞ்சல், தந்தி, தொலைபேசி மூலம் நடைபெற்று வருகிறது. இன்றைக்கு இணையம் வழியான தகவல் தொடர்பு இவற்றின் முக்கியத்துவத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டன.

இணையத்தின் பெரும்பயன்களில் மிகவும் முக்கியமானது "மின்னஞ்சல்" (e-mail) உலகத்தில் எந்த மூலையில் இருப்பவர்களுக்கும் கட்டணம் எதுவுமின்றி மடல் அனுப்பலாம். சில வினாடிகளில் போய்ச் சேர்ந்து விடும். இரவு பகல் எந்த நேரமும் அனுப்பலாம். விடுமுறை நாட்கள் கிடையாது. அனுப்பிய மடல் சென்று சேர்ந்ததா, மடலைப் பெற்றவர் திறந்து படித்தாரா என்பதை அறிந்து கொள்ள முடியும். முகவரிதாரர் அவருடைய வீட்டில் இருக்கும் போதுதான் கடிதம் பெறமுடியும் என்பதில்லை. தனக்கு வரும் கடிதங்களை எந்த நாட்டில் இருந்து கொண்டும் பார்வையிடலாம். மடலுக்கான பதிலை உட்கார்ந்த இடத்திலிருந்தே அனுப்பலாம். நமக்கு வந்த மடலை இன்னொருவர் பார்வைக்குத் திருப்பியனுப்பலாம். சிலரிடமிருந்து கடிதம் வராமல் தடுக்கலாம். மடல்களுக்கு நம் தலையீடின்றி தானாகவே பதில் அனுப்பச் செய்யலாம்.

மின்னஞ்சலுக்கு அடுத்தபடியாக 'உடனடிச் செய்தியாளி' (Instant Messenger) மூலம் செய்திப்பரிமாற்றம் செய்வது செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. தகவல் பரிமாறிக்கொள்ளும் இருவருள் அவரவர் கணிப்பொறிகளை இணையத்தில் இணைத்துக்கொண்டு, உடனடிச் செய்தியாளி மென்பொருளை இயக்கினால் போதும். இருவரும் உரைவடிவில் உரையாடிக் கொள்ளலாம் தொலைபேசியின் உதவியின்றியே ஒலிவாங்கி, ஒலிபெருக்கி உதவியுடன் இருவரும் உரையாடிக் கொள்ளலாம். கணிப்பொறியில் கேமராவை இணைத்துக்கொண்டு கணிப்பொறித் திரையில் உரையாடுபவரின் உருவத்தைக் காணலாம். இரண்டுக்கு மேற்பட்டோர் கலந்துரையாடல் நிகழ்த்தும் வசதியும், உடனுக்குடன் படங்கள், கோப்புகளைப் பரிமாறிக் கொள்ளும் வசதிகளும் தற்போது வந்து விட்டன.

இணையத்தில் இணைக்கப்பட்ட உங்கள் கணிப்பொறி வழியாக உலகில் எந்த நாட்டில் உள்ளவரின் தொலைபேசிக்கும் தொடர்பு கொள்ளலாம். வழக்கமான தொலைபேசியில் வெளிநாட்டு அழைப்புக்கு ஆகும் செலவைவிட இணையம் வழித்தொலைபேசி அழைப்புக்கு குறைந்த செலவே ஆகும். கணிப்பொறி இல்லாமல் சாதாரணத் தொலைபேசி போலவே இணையம் வழியாகப் பேசிக்கொள்ளும் இணையத் தொலைபேசியும் (Internet Telephone) நடைமுறைக்கு வந்து விட்டது. இதனை 'வாய்ப்' (Volp - Voice over Internet Protocol) தொலைபேசி என்றும் கூறுவர்.

## இணையம் வழிக்கல்வி

கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பயன்படக் கூடிய ஏராளமான தகவல்கள் இணையத்தில் கொட்டிக் கிடக்கின்றன என்பது பழைய செய்தி. இணையத்தின் மூலமே கல்வி பயின்று பட்டம் பெறமுடியும் என்பது புதிய செய்தி. இணையத்தில் மட்டுமே செயல்படும் 'மெய்நிகர் பல்கலைக் கழகங்கள்' (Virtual Universities) நடைமுறைக்கு வந்துவிட்டன. வகுப்புக்குப் பெயரைப் பதிவது, பயிற்சிக் கட்டணம் செலுத்துவது, பாடங்களைப் பெறுவது, மெய்நிகர் வகுப்பறையில் (Virtual Universities) பாடம் கேட்பது, ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறுவது, பயிற்சிக் குறிப்புகளை (Assignments) அனுப்புவது, தேர்வுக்கு விண்ணப்பிப்பது, தேர்வினை எழுதுவது, தேர்வு முடிவு அறிவது, சான்றிதழ் பெறுவது – இவையனைத்தையும் வீட்டிலிருந்த படியே கணிப்பொறி மூலமாகச் செய்து முடிக்க முடியும். இந்தியா தவிரப் பிறநாடுகளில் வாழும் தமிழர்கள் மற்றும் தமிழ் பயில விரும்புவோர்க்கு இணையம் வழியாகவே பாடம் நடத்தி, தேர்வு வைத்துப் பட்டம் வழங்கும் 'தமிழ் இணையப் பல்கலைக்கழகம்' ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் உள்ள பள்ளி ஆசிரியர் ஒருவர் தன் வீட்டிலிருந்து கொண்டே இணையம் வழியாகச் சீனாவில், ஜப்பானில் உள்ள ஒரு மாணவனுக்குத் தனிக் கல்விப் பயிற்சி (Tuition) நடத்துகிறார் என்பது நம்ப முடியாத கற்பனைச் செய்தி அல்ல. நடைமுறை.

## மின் வணிகம்

இணையத்தின் பரவலுக்கு முன்பே வணிக நடவடிக்கைகள் விரிபரப்பு பிணைய்ங்கள் வழியாக நடைபெற்று வந்தபோதும், இணையம் வழி வணிகம் நடைபெறத் தொடங்கிய பிறகே மின்வணிகம் வளர்ச்சி பெற்றது எனலாம். மின்வணிக நடவடிக்கையைப் பொதுவாக நான்கு வகையாகப் பிரிப்பர்.

- ஒரு வணிக நிறுவனம் தனது கிளைகளுடனும் சார்பு நிறுவனங்களுடனும் நடத்திக் கொள்ளும் உள் தகவல் பரிமாற்றம் (Business internal)

- இரண்டு வணிக நிறுவனங்களுக்கு இடையே நடைபெறும் தகவல் பரிமாற்றங்களும் பணப் பரிமாற்றங்களும் (Business to Business B2B)

- வணிக நிறுவனத்துக்கும் நுகர்வோருக்கும் இடையே பொருள்களை விற்பது, வாங்குவது தொடர்பாக நடைபெறும் தகவல் மற்றும் பணப்பரிமாற்றங்களும் (Business to Consumer - B2C)

- நுகர்வோர் தமக்குள்ளே நடத்திக்கொள்ளும் ஏல விற்பனை போன்ற வணிக நடவடிக்கைகள் (Consumer to Consumer - C2C)

ஒரு நிறுவனம் தன் உற்பத்திப் பொருள்களுக்காக விளம்பரம் செய்வது தொடங்கி, மக்களின் பார்வைக்குக் கடை பரப்பி வைப்பது, வாடிக்கையாளர் பொருள்களைப் பார்வையிட்டுத் தேவையான பொருட்களுக்கு விலைகுறிப்புப் பெறுதல் (Quotation) வாங்க விரும்பும் பொருள்களுக்குக் கொள்முதல் கோரிக்கையை முன்வைப்பது, அவற்றுக்குரிய விலையைச் செலுத்துவது, பணம் செலுத்தியதற்கான ரசீது பெறுவது பொருட்கள் வாடிக்கையாளருக்கு அனுப்பப்பட்டதற்கான விநியோகச் சீட்டைப் (Delivery Challan) பெறுதல் ஆகிய அனைத்து வணிக நடவடிக்கைகளும் இணையம் வழியாகவே நடந்து முடிந்து விடுகின்றன. பொருள் மட்டும் ஆள், வாகனம் அல்லது கூரியர் மூலம் அனுப்பி வைக்கப்படும். வீட்டிலிருந்தபடியே உங்களுக்குத் தேவையான பொருளை வாங்கிக்கொள்ள முடியும்.

குறிப்பிடத்தக்கச் செய்தி என்னவெனில், சில விற்பனைப் பொருள்களை இணையம் வழியாகவே இறக்குமதி செய்துகொள்ள முடியும். எடுத்துக்காட்டாக, இசைப்பாடல்கள், நிகழ்படங்கள், ஓவியங்கள், நூல்கள், மென்பொருள்கள், சட்ட, மருத்துவ, குடும்ப ஆலோசனைகள் ஆகியவற்றை இணையம் வழியாகவே உரிய விலை செலுத்தி, உடனுக்குடன் பதிவிறக்கிக் கொள்ள முடியும். ஆக, நூற்றுக்கு நூறு வணிக நடவடிக்கைகள் இணையம் வழியாகவே நடைபெற முடியும் என்பதை இன்றைய மின்வணிகம் மெய்பித்துள்ளது.

## புறத்திறனீட்டம் (Outsourcing)

கணிப்பொறித் தொழில்நுட்பமும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பமும் இணைந்து 'தகவல் தொழில்நுட்பம்' (Information Technology - IT) உருவாகியுள்ளது. தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தை அனைத்துத் தொழில்துறைகளிலும் காண முடிகிறது. இதன் காரணமாய் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் (IT Enabled Services - ITES) பெருமளவு வளர்ச்சி பெற்றுள்ளன. ஐடீஈஎஸ் சேவைகளுள் சில.

- **அழைப்புதவி மையங்கள் (Call Centres):** வாடிக்கையாளர்களோடு உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கான உதவி மையங்கள்.

- **பின்னணி அலுவலகச் செயல்பாடுகள் (Back Office Operations) :** ஒரு நிறுவனத்தின் செயல்பாடுகளுக்குப் பின்புலமாக விளங்கும் தகவல் உள்ளீடு. தகவல் வடிவ மாற்றங்கள், நிதி மற்றும் கணக்குவைப்பு, மனித வளச் சேவைகளை உள்ளடக்கியது.

- **ஆவணமாக்கம் மொழி பெயர்ப்பு (Documentation / Translation):** குரல் வடிவ மருத்துவக் குறிப்புகளை எழுத்து வடிவ ஆவணங்களாய் கணிப் பொறியில் சேமித்தல், மருத்துவ அறிக்கைகளிலிருந்து தரவுகளைப் பிரித்தெடுத்து, தரவுத் தளத்தில் சேமித்தல், வணிக ஆவணங்களை மொழி பெயர்த்தல்.

- **உள்ளடக்க உருவாக்கம் (Content Development)** வலையகச் சேவைகள், பொறியியல் வடிவமைப்பு, பல்லூடக உள்ளடக்க உருவாக்கம்.

- **பிணைய ஆலோசனை / மேலாண்மை (Network Consultancy/ Management)** பல்வேறு நாடுகளில் அமைந்துள்ள உயிர்நாடியான கணிப்பொறிப் பிணையங்களின் பாதுகாப்புக்கான ஆலோசனைகள் மற்றும் மேலாண்மை.

ஒரு பெரிய நிறுவனம் தன்னுடைய அன்றாட நடவடிக்கைகள் அனைத்தையும் தன்னுடைய நேரடி மேற்பார்வையில் தன்னுடைய பணியாளர்களைக் கொண்டே

நிறைவேற்றிக் கொள்ள இயலாது. இயலும் எனினும் அதற்காக அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கும். சில குறிப்பிட்ட தொழில்நுட்பத்திறன் அல்லது அகக் கட்டமைப்புத் தன்னிடம் இல்லாமல் போகலாம். எனவே நிறுவனப் பணிகள் சிலவற்றை அப்பணிகளில் அனுபவம் மிக்க வேறு நிறுவனங்கள் மூலமாக நிறைவேற்றிக் கொள்கின்றன. இதனை 'வணிகச் செயலாக்கப் புறத்திறனீட்டம்' (Business Process Outsourcing) என்றழைக்கின்றனர். பெரும்பாலான ஐடீஈஎஸ் சேவைகள் இதில் அடங்குகின்றன.

**வலைப் பதிவுகள் (Blogs)**

இணையத்தில் உலாவரும் மக்கள் தமக்குள்ளே கலந்துரையாடவும் மக்கள் தமக்குள்ளே கலந்துரையாடவும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் பல்வேறு வழிமுறைகள் உள்ளன.

செய்திக் குழுக்கள்

அஞ்சல் குழுக்கள்

இணைய அரட்டை

இணையம் தொடங்கிய நாள் தொட்டே இவை இலவச சேவைகளாக இணையதில் நிலவி வருகின்றன. நாடு, மொழி, மதம், இனம், சாதி கடந்து கருத்துக்களின் அடிப்படையில் புதிய சமூகக் குழுக்கள் உருவாக இவை உதவுகின்றன. இந்த வகையில் இப்போதைய புதிய வரவு 'வலைப்பதிவு' (Blog - Web log என்பதன் சுருக்கம்) எனப்படும் கருத்துப் பதிவு வழிமுறையாகும். இணையத்தின் ஏனைய இலவச சேவைகளைப் போலவே பல முண்ணணி இணையச் சேவைத் தளங்கள் வலைப்பதிவுச் சேவையையும் இலவசமாக வழங்கி வருகின்றன.

வலைவாசி ஒருவர் குறிப்பிட்ட கருத்தோட்டத்துக்கென ஒரு வலைப்பதிவகத்தை உருவாக்கித் தன் கருத்துக்களைப் பதிவு செய்கிறார். அக்கருத்துக்களைப் படிக்கும் பிறவலையுலா வாசிகள் தமது ஒத்த அல்லது மாற்றுக் கருத்துக்களை அப்பதிவகத்தில் பதிவு செய்கின்றனர். கருத்துப் பரிமாற்றம் தொடர்ந்து நடைபெறும். கருத்துப் பரிமாற்றத்தில் நாள்தோறும் புதிய புதிய உறுப்பினர்கள் பங்கு கொள்வர். இன்றைக்கு இணையத்தில் காணப்படும் பெரும்பாலன வலைப்பதிவுகள் விளையாட்டாக, பொழுது போக்காக அமைந்துள்ள போதிலும் மிகச் சிறந்த கருத்துக் குவியல்களும் காணக்கிடைக்கின்றன.

– தொடரும் –

# சத்திய வாழ்வு

-வே. வரதசுந்தரம்-

நம்ப நட, நம்பி நடவாதே என்பது பழமொழி. நம்பி நடப்பது எனது இலட்சியம்.

துணைக்குப் போனாலும் பிணைக்குப் போகாதே என்பது பழமொழி.

பிணைக்குப் போய் நின்று சேவை செய்வதே எனது கர்மயோகம்.

தனக்குக் கண்டு தானம் வழங்கு என்பது பழமொழி.

தனக்கின்றித் தானம் வழங்கு என்பது புதுமொழி.

- இப்படிப் புதுமையான சிந்தனையுடையவர் காந்தி மாஸ்டர். இப்படிப் புதுமையான வாழ்வை நாடுபவர் காந்தி மாஸ்டர்.

இவர் மாதகல் கிராமத்தில் பிறந்து, திருகோணமலை மண்ணில் நீண்ட காலம் சமூக சமயப் பணிகள் பலவாறு ஆற்றி வருகிறார். அல்லற்படும் நெஞ்சங்களுக்கு ஆறுதல் தருகிறார்.

மாதகல் மண்ணில் நுணசை என்ற குறிச்சியில் 1918ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி பிறந்தவர் காந்தி மாஸ்டர். அவருடைய தந்தையார் ஆறுமுகம் பொன்னம்பலம். தாயார் நன்னிப்பிள்ளை. இவரது தமையனார் செல்லையா. சின்னப்பிள்ளை என்ற தங்கையும் தில்லைநாதன் என்ற தம்பியும் இவருக்குண்டு.

மாதகல் கந்தையா காந்தி மாஸ்டர் என்று பலராலும் இன்று பரிவுடன் அழைக்கப்படுவதற்கு அவருக்கு காந்தீயத்தில் உள்ள ஈடுபாடும், காந்தீய நெறியில் வாழ்வதும் முக்கிய காரணமாகும். இப்படி அவருக்கு காந்தீயத்தில் எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது. அதை அவரே கூறக்கேட்போம்.

ஐந்து வயதில் அரிவரி படிக்கும் போது ஒரு ஐயா வந்து பாடசாலையில் பிரசங்கம் செய்தார். நீங்கள் எல்லோரும் சைவப் பிள்ளைகள். மச்சமாமிசம் சாப்பிடக் கூடாது. அது பாவம் என்றார். பாடசாலை விட்டதும் ஓட்டமும் நடையுமாக வீட்டுக்குப் போய் அம்மாவிடம் இவ்விஷயத்தைக் கூறி இனிமேல் மச்சமாமிசம் சாப்பிடமாட்டேன் என்று முடிவு செய்தேன். நூறு பிள்ளைகள் படித்த பாடசாலையில் எனக்கு மட்டுமே பிரசங்கம் பயன்பட்டது. சிறு வயதிலேயே கடவுள் பெரிய பாவச் செயலில் இருந்து என்னைக் காப்பாற்றி விட்டார்.

ஐந்து வயதில் எனது தகப்பனார் சிங்கப்பூருக்கு உழைக்கப் போய் விட்டார். பத்து வயதில் சிங்கப்பூரிலேயே இறந்து விட்டார். வருவாய் எதுவுமே இல்லை. எனது தாயார் அரிசி குற்றி வியாபாரம் செய்தே பிள்ளைகளைக் காப்பாற்றினார். சுப்பையா உபாத்தியாயர் அம்மாவிடம் வந்து கந்தையா நல்லாகப் படிப்பார். அவரைப் படிப்பித்து விடும்படி கூறினார். ஆங்கிலம் படிக்கச் செலவு அதிகம். தமிழ்ப்படிக்க அனுப்பினார்.

எட்டாம் வகுப்பை பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் படித்தேன். அங்கு ஒன்பதாம் வகுப்பு இல்லை. மூளாய்சைவப் பிரகாச மகாவித்தியாலயத்தில் ஒன்பதாம் பத்தாம் வகுப்புகளைப் படித்து சித்தியடைந்தேன். எனது அதிபர் பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்கள். பசித்த போதெல்லாம் உணவு தருவார். அவரே எனது குருவாக அமைந்தார்.

எனது படிப்பையும் பணியையும் கண்ட பண்டிதர் தனது பாடசாலையில் என்னை மேலதிக ஆசிரியராகப் பணிபுரிய வைத்து மாதம் பத்து ரூபாய் சம்பளமும் தந்தார். இக்காலத்தில் நானாகவே படித்து ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் மூன்று பாகங்களிலும் தேறினேன். பண்டிதர் ஐயாவின் உதவியால் உத்தியோகம் கிடைத்தது.

எனது பத்தொன்பதாவது வயதில் 1938 ஜனவரி மாதம் வவுனியாவில் உள்ள கருங்காலிக்குளம் அரசினர் பாடசாலைக்கு கடமை செய்யச் சென்றேன். அங்கு இருபத்து மூன்று பிள்ளைகளும் நானும் தான் இருந்தோம். இரு வருடங்கள் அங்கு பணியாற்றினேன். வகுப்பு ஐந்து விவேகானந்த சபைப் பரீட்சைக்கு பிள்ளைகளை அனுப்பி பரீட்சையில் சித்தியடைய வைத்து சமய அறிவையும் வளர்த்தேன்.

மூளாயில் படித்த போது எனது நண்பர் பெருமையினார் என்னிடம் சத்திய சோதனை என்னும் நூலைத் தந்து படிக்கச் சொன்னார். காந்தியடிகளின் சுய சரிதம் ஆகிய இந்த நூல் எனக்கு மிகமிகப் பிடித்துக் கொண்டது. சிறு வயதிலேயே வரவு செலவுக் கணக்குகளை எழுதி வைக்கவும், நாட்குறிப்பு எழுதவும் காந்தி வழி நடக்கவும் நூல் பெரிதும் உதவியது.

**தற்போது கனடாவில் வாழும் சந்திரசேகரம்பிள்ளை பாலச்சந்திரன் காந்தி மாஸ்டர் பற்றி பாடிய பாடல் இதோ:**

சேவைகள் மூப்பதில்லை செய்தவரும் சாவதில்லை
உதவி பெற்றோர் உள்ளத்தில் என்றுமவர் ''சிரஞ்சீவி''
ஊரெல்லாம் அவர் சொந்தம் உலகெல்லாம் அவர் புகழ்
தன்னலத்தை விட்டெறிந்து வாங்கிக்கொண்ட சொத்தது

கர்ணன் கொடுத்தான் இருந்ததை மட்டுமே
கடன்பட்டுக் கொடுப்பார் காந்தி ஐயா மட்டுமே
அன்னார்க்கு விழா எடுப்பின் விழாவிற்குப் பெருமையது
எந்நாளும் சுகத்தோடு நீண்டகாலம் வாழ்வாராக

சித்தர்களும் முனிவர்களும் தவமிருந்த திருமலையில்
பக்தர்களும் முத்தர்களும் பரவிநின்ற திருத்தலத்தில்
இணையில்லாத் தொண்டராக நலம்புரியும் கர்மஜோதி
காந்தி ஐயாவின் விழாக்கோலம் ஆனந்தம் ஆனந்தம்

சிரித்த முகமும் சீரிய கண்களும்
வெண்தாடியும் மீசையும் வெள்ளைக்கே தகும்
திறந்த நெஞ்சும் ஆனந்த வார்த்தையும்
நடைநடையாய்த் தொண்டும் என்றென்றும் வாழ்க.

நன்றி மகாத்மா காந்தியின் மகத்தான சீடர்

## காந்திப் பெரியார் 92வது பிறந்த தினவிழா



19.12.2008 அன்று திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் திருகோணமலை மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம் காந்திப் பெரியார் பொ. கந்தையா ஆசிரியர் அவர்களை அவரின் 92வது பிறந்த தினத்தை ஒட்டி நடத்திய பாராட்டு விழாவில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தண்டாயுதபாணி, காந்திப்பெரியாரை பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம்.

# சைவசித்தாந்தம்- 6

கி. லக்ஷ்மணன்

முப்பொருள்

சைவ சித்தாந்திகள் மூன்று பொருள்களைப்பற்றிப் பேசுவது வழக்கம். நமது சிந்தனைக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய விஷயம் அனைத்தையும் இந்த மூன்று பொருள்களுள்ளும் அடக்கலாம். இவற்றுள், முதலாவது பொருள் இறைவன். சைவசித்தாந்திகள் இறைவனைப் பெரும்பாலும் பதி என்ற சொல்லால் குறிப்பிடுவர். பதி என்றால் தலைவன் என்பது கருத்து. சைவ சித்தாந்திகள் இறைவனைப்பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களை முன்னரே குறிப்பிட்டுவிட்டோம். இரண்டாவது பொருள் ஆன்மா. சைவ சித்தாந்தத்திலே ஆன்மா பசு என்ற சொல்லாலேயே மிகுதியும் குறிப்பிடப்படுகின்றது. இப்பசுவைப்பற்றியும் முந்திய கட்டுரைகளிலே குறிப்பிட்டுள்ளோம். ஆன்மாவுக்குச் சைவ சித்தாந்திகள் வழங்கும் பசு என்ற சொல்லைக் கவனித்தல் வேண்டும். பசு என்றால் கட்டுண்டது என்பது கருத்து. ஆன்மாவின் கட்டுண்ட நிலையையே பசு என்ற சொல் குறிக்கும். கட்டுண்டது எனவே, எதனால் கட்டுண்டது என்ற வினா எழுவது இயல்பு. இதற்குக் கிடைக்கும் விடை மூலம் சைவசித்தாந்திகள் பேசும் மூன்றாவது பொருளை அடையலாம். ஆன்மா கட்டுண்டது பாசத்தினால் என்பர். ஆன்மாவின் பரிபூரணத்துவத்துக்குத் தடையாயிருக்கும் பொருள் பாசம். ஆன்மாவைப் பசு ஆக்குவது இப்பாசம்தான். இதுவே சைவசித்தாந்தம் பேசும் மூன்றாவது பொருள். முதலிரண்டையும் பற்றி முந்திய கட்டுரைகளில் குறிப்பிட்டுவிட்டோம். எனவே மூன்றாவதாகிய பாசத்தை இங்கு எடுத்துக்கொள்வோம்.

பாசம்

சைவ சித்தாந்தத்திலே பாசம் என்னும் சொல் மூன்று பொருள்களைக் குறிக்கும். அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. இவற்றைச் சற்று விளக்குதல் நலம். முதலில் மாயையை எடுப்போம். ஆன்மா உறையும் உடலும், அவ்வுடல் உறையும் இவ்வுலகும் ஆன்மாவுக்குப் பாசமாகும். ஆனால், உடலையும் உலகையும் நேரே பாசம் என்ற சொல்லாற் குறிப்பிடுவது குறைவு. உடலும் உலகும் உற்பத்தியாகும் போது எப்பொருளிலிருந்து உற்பத்தியாகின்றனவோ, பின் ஒடுங்கும்போது எப்பொருளில் ஒடுங்குகின்றனவோ அப்பொருளைத்தான் பாசம் என்ற சொல்லால் குறிப்பிடுவது வழக்கம். உடல், உலகம் ஆகியவற்றின் உற்பத்திக்கும் ஒடுக்கத்திற்கும் மூலகாரணமாயுள்ள பொருள் மாயை

எனப்படும். இம்மாயை என்ற சொல் 'ம்,யா' என்ற இரு பகுதிகளால் ஆனது. ம் என்றால் ஒடுக்கம் என்பது, யா என்றால் விரிவு என்பதும் கருத்து. மாயை ஒரு பாசமாகும். ஆன்மா உடலோடு சேர்ந்த பின்தான் அதற்கு அறிவு ஏற்படும். அதற்குமுன் அது அறிவற்றுக் கிடக்கும். ஆன்மாவுக்கு மாயை ஒரு பாசம் என்னும்போது ஒன்றை நாம் கவனிக்கவேண்டும். ஆன்மா அறிவு பெறத் துணை செய்யும் மாயையைச் சித்தாந்திகள் பாசம் என்கின்றனர். ஏனெனில், மாயையிலிருந்து தோன்றும் உடலாலும், ஞானேந்திரியங்கள், அந்தக்கரணங்கள் ஆகியவற்றாலும் கிடைக்கும் அறிவு பூரண அறிவு அல்ல. அது நிலையில்லாத உலகை நிலையானது என எண்ணச் செய்து, அதில் ஆன்மாவைப் பற்று வைக்கச் செய்யும் மயக்க அறிவு. இதனாலேதான், மாயையும் பாசம் எனப்படுகின்றது. மிகுதியும் துன்பத்துக்கே இடமான உடலுள்ளும் உலகினுள்ளும் ஆன்மா புகுந்து அல்லற்படுவதற்கு இரு காரணங்கள் உள. ஒன்று, ஆன்மாவோடு அநாதியாயேயுள்ள ஆணவம் எனப்படும் ஓர் அறியாமை. மற்றது, ஆன்மா பிறவி தோறும் செய்யும் கன்மங்கள். எனவே, இவையும் ஆன்மாவுக்குப் பாசங்களாகும்.

**ஏனையோர் கொள்கைகள்:**

இதுவரை குறிப்பிட்ட பதி, பசு, பாசம் ஆகிய மூன்றுமே சைவ சித்தாந்தத்தின் அடிப்படை. இம்முப்பொருளின் ஆராய்ச்சியுள்ளே சைவ சித்தாந்தத்தின் தத்துவப் பகுதி அனைத்தும் அடங்கும். சைவ சித்தாந்தம் இவற்றுள் எதையும் தோற்றமெனக் கருதுவதில்லை. மூன்றையும் உண்மையெனவே கருதுகின்றது. சைவ சித்தாந்தத்துக்கும் ஏனைய இந்திய மதங்களுக்குமிடையே உள்ள அடிப்படை வேற்றுமையை இங்கு காணலாம். உண்மையெனச் சைவசிந்தாந்தம் வாதிக்கும் இந்திய மதமும் உண்டு. இவற்றுள் ஒன்று மட்டுமே உண்மையென ஒப்புக்கொள்ளும் மதமும் உண்டு. இரண்டை மட்டும் ஒப்புக்கொள்ளும் மதமும் உண்டு. யார் யார் எதையெதை உண்மை என ஒப்புக்கொள்ளுகிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதன் மூலம் சைவ சித்தாந்தத்துக்கு ஏனைய மதங்களுக்கும் அடிப்படையிலுள்ள வேற்றுமைகளை மிக எளிதாகக் காட்டிவிடலாம். ஒருகோடியில், ஒன்றுமே உண்மையல்ல என்போர் அதற்கு நேர் மறுகோடியில் யாவுமே உண்மையென்போர்' இவர்கள் இருவருக்குமிடையில் ஏனையோரை நிறுத்துதல் கூடும். அடிப்படையில் ஒன்றுமே உண்மையல்ல எனக்கொள்வோருக்குப் பௌத்தருள் ஒரு சாராராகிய சூன்யவாதிகளை உதாரணமாகக் குறிப்பிடலாம். இவற்றுள் இரண்டை. அதாவது பசுவையும் பாசத்தையும் ஒப்புக்கொள்ளுவோருக்குச் சாங்கியரைக் உதாரணமாகக் காட்டலாம். சாங்கியர் பிரகிருதி, புருடன் ஆகிய இரண்டு தத்துவங்களை மட்டுமே ஒப்புக்கொள்ளுவர். அவர்கள் பேசும் மாயை, ஆன்மா ஆகிய

இரண்டையும் ஒப்பிடலாம். அனால், சாங்கியர் சைவ சித்தாந்திகளது மூன்றாவது தத்துவமாகிய பதியை ஒப்புக்கொள்ளுவதில்லை. ஒரேயொரு பொருளை மட்டும் உண்மையென ஒப்புக்கொள்ளுவோருக்கு வேதாந்திகளையும் உலகாயதரையும் உதாரணமாகக் கொள்ளலாம். ஆனால், இவர்களிருவரும் உண்மையென ஒப்புக்கொள்வது ஒரே பொருளையல்ல. வேதாந்திகள் பசுவையும், பாசத்தையும் தோற்றம் என ஒதுக்கி, ஆகப் பதியை மட்டுமே உண்மை என வாதிப்பர். உலகாயதர் பதியையும் பசுவையும் ஒதுக்கிவிட்டுப் பாசத்துள் ஒன்றாகிய உலகத்தை மட்டுமே உண்மை எனக் கருதுவர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தத்தம் கொள்கைகளுக்கும் கொடுக்கும் காரணங்களை அம்மதங்கள் பற்றிய கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளோம். எனவே, இந்த ஒப்பிடுகையை இம்மட்டில் நிறுத்திச் சைவ சித்தாந்திகள் பேசும் பாசத்துக்கு மீண்டும் திரும்புவோம்.

**மாயை:**

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று பாகங்களுள் ஆணவத்தைப்பற்றி முந்திய கட்டுரையிலே குறிப்பிட்டோம். மாயைப்பற்றிப் பாசம் என்னும் தலைப்பிற் சில குறிப்பிட்டோம். மேலும் சில குறிப்புக்களை இங்கு குறிப்பிடுவோம். மாயை எனப்படுவது கண்ணுக்குப் புலப்படாத ஒரு சூக்குமப் பொருள். அதிலிருந்தே இவ்வுலகம் முழுதும் உற்பத்தியாகின்றது என்பதே சித்தாந்திகளது துணிவு. கண் முதலிய நமது ஞானேந்திரியங்கள் மட்டுமன்றி அவற்றைவிட நுட்பமான மனம் புத்தி முதலிய அந்தக் கரணங்கள் கூட மாயை எனப்படும் இம்மூலப் பொருளிலிருந்தே உற்பத்தியாகின்றன. மாயையினது இயல்புகளையும் இலக்கணங்களையும் மிகத் தெளிவாயும் சுருக்கமாயும் சிவஞான சித்தியார் என்னும் நூல் கூறுகின்றது. ஆக, ஒரேயொரு மாயைதான் உள்ளது. அது நித்தியமானது: வடிவமற்றது. அதுதான் உலகத்திற்கு வித்து. அது அறிவற்ற சடப்பொருள். அது எங்கும் வியாபியாயுள்ளது. மாயை இறைவனுக்கு ஒரு சக்தி போன்றது: உயிர்களுக்கு உடம்புகளையும், உலகையும், அனுபவத்திற்குரிய பொருள்கள் அனைத்தையும் ஆக்கிக் கொடுப்பது அதே சமயம் உயிர்களை மயக்குவதும் இம் மாயையே இக்கருத்துக்களைக் கூறும் செய்யுள் பின்வருமாறு:

நித்தமாய் அருவாய், ஏக நிலையதாய், உலகத் திற்கோர்
வித்துமாய், அசித்தா யெங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சத்தியாய், புவன போகந் தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய், மாயை மயக்கமும் செய்யுமன்றே

## படைப்புப் பற்றி இருபெரும் நியதிகள்:

இவ்விடத்தில் இரண்டு வினாக்களை எழுப்பலாம். உலகம் ஒரு காலத்தில் முற்றாக அழிந்து பின் தோன்றும் என்ற முடிவுக்குச் சித்தாந்திகள் எங்ஙனம் வந்தனர் என்பது முதல் வினா. இதற்கு விடையை இரண்டாவது கட்டுரையிலே குறிப்பிட்டு விட்டோம். உலகம் அங்ஙனம் ஒரு காலத்தில் உற்பத்தியானது என்பதை ஒப்புக்கொண்டாற் கூட அது மாயை எனப்படும் ஒரு சடப்பொருளிலிருந்துதான் சிருஷ்டிக்கப்பட்டது என ஏன் கொள்ள வேண்டும் என்பது இரண்டாவது வினா. சைவ சித்தாந்திகள் தமது கொள்கைக்கு ஆதாரமாக இருபெரும் நியதிகளை வற்புறுத்துகின்றனர். ஒன்றிலிருந்து இன்னொன்றை ஆக்க முடியுமேயொழிய, ஒன்றுமில்லாமற் சூன்யத்திலிருந்த எதையும் ஆக்க முடியாது. மரத்திலிருந்து ஒரு மேசையைச் செய்ய முடியுமேயொழிய ஒன்றுமில்லாமலே செய்ய முடியாது. இது முதலாவது நியதி. ஒரு பொருளிலிருந்து அதற்கு நேர்மாறான இயல்புடைய எதையும் உற்பத்தி செய்ய முடியாது என்பது இரண்டாவது நியதி. பாகல் விதையிலிருந்து பாகற்கொடியை உண்டு பண்ணலாமேயொழியச் சுரைக் கொடியை உண்டு பண்ண இயலாது. செய்பொருளின் இயல்புகள் அவற்றின் மூலப் பொருள்களில் இருக்க வேண்டும். காரியத்தின் தன்மைகள் காரணத்திலும் இருக்க வேண்டும். இந்த நியதிக்குச் சத்காரியவாதம் என்று பெயர். இதனைச் சாங்கியம் பற்றிய கட்டுரையிலே விரிவாக விளக்கியுள்ளோம். இந்த இருபெரும் நியதிகளைக் கொண்டே சைவ சித்தாந்திகள் நிலம், நீர், காற்று முதலிய சடப்பொருள்களாகிய சடவுலகுக்கு மூலமும் ஒரு சடப்பொருளாகவே இருத்தல் வேண்டும். என்னும் முடிவுக்கு வந்தனர்.

## உலகப் படைப்பைப் பற்றி ஏனையோர் கருத்துக்கள்.

உலகம் எதிலிருந்து, எங்ஙனம் படைக்கப்பட்டது என்பதைப்பற்றி ஏனைய மதத்தினர் கூறுவனவற்றைச் சைவ சித்தாந்திகளது கொள்கைகளேயாடு ஒப்பிடுவது இங்கு பொருத்தமாகும். அங்ஙனம் ஒப்பிட்டால் சைவ சித்தாந்தக் கொள்கையின் சிறப்பும் ஓரளவு புலனாகும். மேல்நாட்டினர் பலர் ஆண்டவன் உலகை ஒன்றுமிலாமையாகிய சூன்யத்திலிருந்தே படைத்தனன் என்பர். இது பொருந்தாது என்பது சொல்லாமலே விளங்கும். பிரம்மம் மட்டுமே உள்பொருள் என வாதிக்கும் வேதாந்திகள் பிரம்மத்திலிருந்தே இச்சட உலகு தோன்றுகின்றது என்பர். அறிவே மயமாய பிரம்மத்திலிருந்து அதற்கு நேர்மாறான இயல்புடைய இச்சட உலகு எங்கனம் தோன்றுகின்றது என வினவின், சிலந்தியிடமிருந்து நூல் வருவது போல் என அவர்கள் விடை பகருவர். சிலந்தி சீவனுள்ள பொருளாயினும் அது உற்பத்தி செய்யும் நூல் சடப்பகுதியாகிய அதன் உடலிலிருந்தே உற்பத்தியாகின்றது எனவே, சிலந்தியினிடமிருந்து நூல்

உற்பத்தியாவது போலச் சித்தாகிய பிரம்மத்திலிருந்து சடமாகிய உலகம் உற்பத்தியாகின்றது என்பது பொருந்தாது.

சாங்கியர், பிரகிருதி எனப்படும் ஒரு மூலப் பொருளிலிருந்தே சடஉலகம் அனைத்தும் உற்பத்தியாகின்றது என்பர் ஆனால், இறைவன் ஒருவன் உளன் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளுவதில்லை. எனவே, அவர்கள் பேசும் சடப்பொருளாகிய பிரகிருதியை இயக்குபவர் யார்? அதிலிருந்து உலகைப் படைப்பவர் யார் என்ற வினாக்களுக்கு விடை கூறுவதில் அவர்களுக்கு வில்லங்கமுண்டு.

உலகப் படைப்பைப்பற்றிச் சைவ சித்தாந்திகளின் கொள்கையை ஏனையோர் கொள்கைகளோடு ஒப்பிடு முகமாகச் சில உதாரணங்களை இதுவரை குறிப்பிட்டோம். ஒரு பானையைச் செய்வதற்கு மண் முதற்காரணம் குயவன் நிமித்த காரணம் இதைப் போலவே, இவ்வுலகுக்கு மாயை முதற் காரணம். இறைவன் நிமித்த காரணம் அவனுடைய சக்தி துணைக் காரணம். இதுவே சைவசித்தாந்திகளின் கொள்கையின் சுருக்கம் எங்ஙனம் பெரிய ஆலமரத்தின் அம்சங்கள் யாவும் சிறிய வித்து ஒன்றுள் அடங்கிக் கிடக்கின்றனவோ, அங்ஙனமே இவ்வுலகின் அம்சங்கள் யாவும் சூக்குமப் பொருளாகிய மாயையுள் அடங்கிக் கிடக்கின்றன. இம்மாயையை இறைவன் தனது சக்தியினால் இயக்க, இதிலிருந்து படிப்படியாக 36 தத்துவங்கள் தோன்றுகின்றன. இங்கு தத்துவங்கள் எனப்படுவன, மாயையிலிருந்து தோன்றும் பொருள்கள் இவற்றுள் கடைசியாகத் தோன்றுவனவே பஞ்சபூதங்கள். உலகிலுள்ள சடப்பொருள்கள் மட்டுமன்றி நமது புத்தி, சித்தம், அகங்காரம் போன்ற நமது உளதத்துவங்கள் கூட மாயையிலிருந்து உற்பத்தியாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இத்தத்துவங்களின் பெயரையும் இவை உற்பத்தியாகும் ஒழுங்கையும் சைவசித்தாந்த நூல்கள் மிக விவரமாகக் கூறுகின்றன. அதுமட்டுமன்றி அம் முப்பத்தாறு தத்துவங்களுள் ஒவ்வொன்றும் எவ்வெவ் விதமாகப் பயன்படுகின்றன என்பதை விளக்கி, அவையாவுமே இன்றியமையாதன என்பதற்குத் தக்க காரணங்களும் கூறுகின்றன. அவைகளை நாம் இங்கு விவரிக்கவில்லை.

### மாயையும் பிரகிருதியும்:

சைவ சித்தாந்திகளைப் போலவே சாங்கியர் என்போரும் உலகம் சடமான ஒரு மூலப் பொருளிலிருந்து தோன்றுகின்றது எனக் கருதுகின்றனர் என மேலே குறிப்பிட்டோம். அப்பொருளைச் சாங்கியர் பிரகிருதி என்ற சொல்லால் குறிப்பர், ஆனால் சைவ சித்தாந்திகள் பேசும் மாயைக்கும் சாங்கியர் பேசும் பிரகிருதிக்கும் சில முக்கிய வேற்றுமைகள் உண்டு. சாங்கியரது பிரகிருதியிருந்து ஒன்றிலிருந்து ஒன்றாக 24 தத்துவங்கள் தான் தோன்றுகின்றன. ஆனால், சைவசித்தாந்திகள் பேசும் மாயையிலிருந்து 36 தத்துவங்கள் தோன்றுகின்றன. கடைசித் தத்துவம் இருசாராருக்கும் ஒன்றுதான்.

எனவே சைவசித்தாந்திகளது 36-ஆவது தத்துவம் சாங்கியரது 24-ஆவது தத்துவமாகின்றது. சைவசித்தாந்திகளது 13-ஆம் தத்துவமே சாங்கியரது முதலாவது தத்துவமாகிய பிரகிருதி எனவே சைவசித்தாந்திகள் சாங்கியரைவிட இத்துறையிலே மிக ஆழமாகச் சென்றிருக்கின்றனர் என்பது தெளிவு சாங்கியர் ஒப்புக்கொள்வதிலும் பார்க்க மேலும் 12 தத்துவங்களைக் கைக்கொள்ள வேண்டிதற்குரிய காரணங்களையும் சைவ சித்தாந்திகள் விவரமாகக் கொடுத்துள்ளனர். சைவ சித்தாந்திகள் மாயையைச் சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என மூன்றாகப் பிரித்துச் சுத்த மாயையோடு மட்டுமே இறைவனுக்கு நேரடியான தொடர்பு உண்டென்றும், ஏனைய மாயைகளுக்கும் இறைவனுக்கும் நேரடியான தொடர்பு கிடையாது என்றும். கூறுவர் ஆனால், சாங்கியரது பிரகிருதியிலே இத்தகைய பாகுபாடு எதுவுமே கிடையாது. இவை, சைவ சித்தாந்திகளது மாயைக்கும் சாங்கியரது பிரகிருதிக்கும் உள்ள முக்கிய வேற்றுமைகளுட் சில

**சைவசித்தாந்திகளது மாயையும் வேதாந்திகளது மாயையும் :**

இனி, சைவசித்தாந்திகள் பேசும் மாயைக்கும் வேதாந்திகள் பேசும் மாயைக்குமுள்ள வேற்றுமையை ஆராய்வோம். இருதிறத்தாரும் மாயை என்ற ஒரு பொருளைப்பற்றிப் பேசுகின்றனர். சைவ சித்தாந்தத்தைவிட வேதாந்தத்திலே தான் இம்மாயை மிக முக்கியமானதாகத் தோன்றுகின்றது. ஏனெனில் வேதாந்திகளுக்கு மாயாவாதிகள் என்று ஒரு பெயரும் வழங்குகின்றது. வேதாந்தத்திலே மாயை, அறியாமை என்ற கருத்திலேயே பெரிதும் வழங்குகின்றது. ஒரு பிரம்மம், பல உயிர்களாகவும் உலகாகவும் தோன்றுவதற்குக் காரணமாகிட ஒரு மயக்கம் தான் மாயை. ஆனால், சைவ சித்தாந்தத்தில் சடவுலகுக்குக் காரணமான ஒரு சடப்பொருளே மாயையாகும். வேதாந்திகளுக்கு மாயை, உளதோ இலதோ என விவரிக்க முடியாத ஒரு அநிர்வசனீயப்பொருள். ஆனால், சைவசித்தாந்திகளுக்கு, மாயை உளது என அறுதியிட்டுக் கூறக்கூடிய ஓர் உள்பொருள். இவையே இவர்களுக்கிடையே மாயைபற்றிய கொள்கையிலேயுள்ள முக்கிய வேற்றுமை.

**சுருக்கம்**

பதி, பசு, பாசம் என்பனவே சைவசித்தாந்திகள் பேசும் முக்கியமான மூன்று பொருள்கள் என்பதும்: அவற்றுள் பாசம் என்ற சொல் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று பொருள்களைக் குறிக்கும் என்பதும் உடலும் உலகமும் எதிலிருந்து தோன்றுகின்றனவோ அதுவே மாயை எனப்படுவது என்பதும் இதனைப் பாசம் என்பதற்குக் காரணங்கள் எவை என்பதும் அம்மாயைக்கு, சாங்கியரது பிரகிருதிக்கும், வேதாந்திகளது மாயைக்குமுள்ள வேற்றுமைகள் எவை என்பதும் இங்கு கூறப்பட்டுள்ளன.

**தொடரும்.**

அட்டைப்படக் கட்டுரை

# சித்தர் அகத்தியர்

- மா. கோவிந்தன் -

(தமிழில் கரு ஆறுமுகம்)

அகத்தியர் ஒரு புராணப் பாத்திரமாகவே ஆகிவிட்ட முனிவர் ஆவார். அவரை மையமாகக் கொண்டு பின்னப்பட்டிருக்கும் கதைகள் பலப்பல அவரைப் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன வேத இலக்கிவேத காலத்து சப்த ரிஷிகளில் அகத்தியரும் ஒருவர் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. அவர் ரிக் வேத சூத்திரங்கள் பலவற்றை இயற்றியதாகவும் சொல்லப்படுகிறது.

வேதக்கதைகளின்படி முன்னொரு காலத்தில் நேசத்திற்கும் ஒற்றுமைக்கும் கடவுளான மித்திரன், கடலின் கடவுளான வருணன் ஆகிய இருவருக்கும் தேவலோக நாட்டியக்காரியான ஊர்வசியை யார் அடைவது என்று ஒரு போட்டி ஏற்பட்டது. ஆனால் இருவராலும் அது முடியாமற் போனது. உணர்ச்சி மிகுதியால் இருவரும் தங்கள் வீரியத்தை (விந்துவை) இழந்ததுதான் கண்ட பலன், வீரியம் வீணாகக்கூடாதே என்று விட்டனர். பானையில் இருந்து அகத்தியரும், கடலில் இருந்து சப்த ரிஷிகளில் மற்றொருவரான வசிஷ்டரும் பிறந்துவந்தனர். இதனால் அவர்கள் இருவரும் சேர்ந்து "மைத்ர–வாருணீயர்" என்றும் "ஔர்வசியர்" என்றும் அழைக்கப்படுகின்றனர். அகத்தியர் பானையிலிருந்து பிறந்து வந்ததால் கலசஜர், கும்பயோனி, கும்பசம்பவர், கும்பமுனி, கடோத்பவர் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

இத்தகைய கதைகளுக்கு ஏதேனும் உட்பொருள் உண்டா என்பது தெரியவில்லை அகத்தியர் உண்மையிலேயே வாழ்ந்தவர் என்பதற்கான குறிப்புகள் உண்டு என்பதுமட்டும் உறுதி அவருக்கு லோபாமுத்திரை என்ற மனைவியும் காசரன் என்ற மகனும் ஒரு தமக்கையும் இருந்தனர் என்பதும் தெரிகிறது. குடும்பத்தில் வாழ்ந்துகொண்டே துறவு வாழ்க்கையையும் வெற்றிகரமாக நடத்த முடியும் என்பது அகத்தியரால் தெளிவாகிறது.

**அகத்தியரின் ஆசிரமங்கள்**

சிவனுக்கும் பார்வதிக்கும் திருமணம் நிகழ்ந்தபோது அதைத் கண்டு களிப்பதற்காகக் கடவுளர் அத்தனைபேரும் கைலாயத்தில் திரண்டதால் பூமி பாரம் தாங்காமல் தென்முனை உயர்ந்தும் வடமுனை தாழ்ந்தும் நிலைகுலைந்து ஒருபக்கமாகச் சாய்ந்தது. அதைச் சாயாமல் சமன் செய்வதற்காக சிவன்

அகத்தியரைக் கைலாயத்தில் இருந்து தென்திசைக்குச் செல்லுமாறு பணித்தார்.

அகத்தியரின் தென்திசைப் பயணம் மூன்று நிலைகளில் நடந்தது. முதல் நிலை அவர் ஆசிரமம் அமைத்தது (இவ்வாசிரமம் தற்போதைய நாசிக் நகரிலிருந்து சில கல்தொலைவில் அமைந்துள்ளது. பழைய பஞ்சவடி இதுதான். தண்டக ஆரண்யத்தின் வட எல்லையில் இது இருக்கிறது) விதர்ப்ப நாட்டு அரசனின் மகளான லோபாமுத்திரையை மணந்து கொண்டது. ராமனுடனான முதற் சந்திப்பு ஆகியவற்றை உள்ளடக்கிது.

## இராமாயணத்தில் அகத்தியர்

இராமாயணத்தில் ராமனும் இலட்சுமணனும் அகத்தியரின் ஆசிரமத்தை நெருங்கும்போது. ஒரு கொடிய பாம்பிடமிருந்து அகத்தியர் உலகத்தைக் காப்பாற்றிய கதையை ராமன் இலட்சுமணனுக்குச் சொல்கிறான். அகத்தியர் வாதாபி என்ற அரக்கனை உண்டு சீரணித்த நிகழ்ச்சியையும் இராமன் இலட்சுமணனுக்கு விவரிக்கிறான். இந்த நிகழ்ச்சி இராமாயணம், மகாபாரதம் இரண்டிலுமே சொல்லப்படுகிறது. இரண்டிலும் வேறுபாடுகள் உண்டு என்றாலும் அந்த வேறுபாடுகள் மிகச் சிறியவையும் தள்ளத்தக்கவையும் ஆகும். அகத்தியர் அசுரர்களை ஒழித்த இந்த நிகழ்ச்சியின் காரணமாக தண்டக ஆரண்யம் (காடு)மனிதர்கள் வசிக்கத் தகுதியுடையதாயிற்று. அகத்தியர் அசுரர்களை அழித்து செய்தியை வேறு சில இடங்களிலும் இராமாயணம் பதிவு செய்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, தாடகை என்ற அரசுக்கி வேதப்பண்பாட்டினர்மீது தாக்குதல் நடத்துவதற்கான காரணத்தை இராமனுக்கும் விளக்கும் இடம். அகத்தியர் தாடகையின் கணவனான சுந்தனை அழித்தார். அதனால் கோபம் கொண்ட தாடகையும் அவள் மகன் மாரீசனும் அகத்தியரைத் தாக்கினார்கள். அகத்தியர் அவர்களை கோரமான அரக்கர்களாகப் போகும்படிச் சபித்தார் அது முதல் தாடகை முனிபுங்கவர்களின்மீது பழிவாங்கும் படலமாகப் போர் நடத்தி வருகிறாள்.

அகத்தியர் இந்தியாவின் மிகப்புகழ்பெற்ற யோகிகளில் ஒருவராவார். அவர் உருவத்தால் மிகவும் குட்டையானவர். வெகு திறமையான வேட்டைக்காரர் வில்வீரர் மிகவும் பலசாலிகளான வீரர்களை எல்லாம் அவர் வென்றிருக்கிறார்.

அகத்தியருடைய பயணத்தின் இரண்டாம் நிலை மலைக்குடத்தில் உள்ள அவருடைய புதிய இருப்பிடத்திலிருந்து தொடங்குகிறது. இந்த இடம் பாதாமி (வாதாபி யிலிருந்து மூன்றுகல் தொலைவில் உள்ளது. தட்சிணகாசி என்று அறியப்படும் இது மகாராஷ்டிர மாநிலத்தின் காலாட்சி மாவட்டத்தில் உள்ளது. இந்தப் புதிய இருப்பிடம்

அவருடைய நாசிக் ஆசிரமத்திலிருந்து முந்நூறுகல் தொலைவு. இந்த இரண்டாம் நிலையின் போதுதான். வாதாபி, வில்லவனை அகத்தியர் கொன்றதும் தின்றதும்.

அகத்தியரது பயணத்தின் மூன்றாம் நிலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் நிறைய. இந்தச் சமயத்தில் அகத்தியர் பொதிகை மலையில் இருந்தார். முதல் தமிழ்ச் சங்கத்தை நிறுவி அதன் தலைமைப் புலவராகவும் இருந்தார். தமிழ் இலக்கண நூல் ஒன்று எழுதினார். அதுவல்லாமல் மருத்துவம், மருந்தியஸ், இரசவாதம் யோகம், அறம், தத்துவம், சமயச் சடங்குகள், பேயோட்டுதல், வழிபாடு, மறைமெய்ஞ்ஞானம், மாந்திரீகம் ஆகியவற்றில் நிறைய நூல்கள் எழுதினார்.

அவர் கடல் கடந்து இந்தோனேசியத் தீவுகளை அடைந்ததாகச் சொல்லப்படுகிறது. அங்கே அவர் பர்கினத்தீவு (போர்னியோ), குசத்தீவு, வராகத்தீவு ஆகிய தீவுகளுக்குச் சென்றதாகத் தெரிகிறது. இச்சமயத்தில் மலேயாத் தீவின் (தற்போதைய மலேசியா) மகா மலேயா மலையில் தங்கினார் என்றும் சொல்லப்படுகிறது. பயணத்தின் அடுத்த நிலையில் அகத்தியர் சயாமுக்குள் (தாய்லாந்து) நுழைந்து கம்போடியாவை அடைந்தார். இங்கே தான் கிழக்கு நோக்கிய அவருடைய பயணம் முடிவடைகிறது. இங்கு அவர் யசோமதி என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். அகத்தியர் மூலமாக அவள் பெற்ற பிள்ளைகள் அரசாளும் உரிமை பெற்றார்கள். அந்த வம்சாவளியில் யசோவர்மன் என்பவன் மிகவும் தகுதியானவனும் புகழ் பெற்றவனுமாவான்.

அகத்தியரின் ஆசிரமங்களில் மிகவும் புகழ்பெற்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் பொதிகை மலையான குற்றாலப் பகுதியில் அமைந்ததாகும். அகத்தியர் இன்னும் இங்கே வாழ்ந்து கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது. இங்கே தான் பாபாஜி அகத்தியரிடம் கிரியா குண்டலினிப் பிராணாயாமத்துக்கான உபதேசத்தைப பெற்றார்.

**அகத்தியரும் தமிழ்மொழியும்**

தமிழ்மொழி மற்றும் இலக்கணத்தின் தந்தை அகத்தியர் என்று மரபு கூறுகிறது. அவரே பாண்டிய மன்னர்களின் குலகுரு என்றும் சொல்லப்படுகிறது. பாண்டிய மன்னர்கள் சிவன், பார்வதியின் கால்வழியினர். சிவனும் பார்வதியுமே அந்தப் பரம்பரையின் முதல் அரசனும் அரசியும் ஆவர். பழந்தமிழகத்தின் தலைநகரம் என்று சொல்லத்தக்க தென்மதுரை நகரில் பாண்டிய அரசைக் குலசேகர பாண்டியன் தோற்றுவித்தான்.

அகத்தியர் எழுதிய தமிழ் இலக்கண நூல் பன்னிரண்டாயிரம் பாடல்கள் அல்லது சூத்திரங்கள் கொண்டது என்று சொல்லப்படுகிறது. இன்று அந்நூல் அழிந்துவிட்டது. நமக்குக் கிடைப்பதெல்லாம் தொல்காப்பியரால் மேற்கோள் காட்டப்படும் ஒன்றிரண்டு சூத்திரங்களே ஆகும்.

அகத்தியர் தமிழகத்தில் எப்போது கால்பதித்தார் என்பது தெரியவில்லை அகத்தியரை ஆதரித்த குலசேகர பாண்டியனின் காலம் உறுதிப்படுத்தப்பட்டால் அகத்தியரின் காலமும் உறுதிப்படும். காலம்பற்றிக் கொடுக்கப்படும் கணக்கீடுகளில் வேறுபாடுகள் இருக்கின்றன.

குலசேகர பாண்டியன் அவையைவிட்டு விலகிய அகத்தியர் பின்னர் தவவாழ்வு வாழப் பொதிகை மலைக்குச் சென்றார். அவர் அங்கே யார் கண்ணுக்கும் புலப்படாமல் இன்னும் வாழ்ந்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

கடல்கோளுக்கு எஞ்சி நமக்குக் கிடைத்திருக்கிற தமிழ் நூல்களில் அகத்தியரைப்பற்றிய தெளிவான குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. சங்கத் தொகை நூல்களில் ஒன்றிரண்டு இடங்களில் மறைமுகமான குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் அதற்காக அகத்தியர் அந்நாளில் அறியப்படாதவராக இருந்தார் என்று பொருள் கொள்ள வேண்டியதில்லை. தமிழ் இலக்கியங்களில் இடம்பெறும் பொதிகைமுனி என்ற சொல் அகத்தியரை அந்நாளின் ஆசிரியர்கள் அறிந்து வைத்திருந்தார்கள் என்பதைக் காட்டுகிறது. அகத்தியர் கண்டன் என்ற சோழ அரசனின் நண்பர் என்றும் அவனுடைய வேண்டுகோளின் பேரிலேயே கமண்டலத்தைக் கவிழ்த்து காவேரியை விடுவித்ததாகவும் பௌத்த காப்பியமான மணிமேகலை கூறுகிறது. இலங்கேசுவரனான இராவணன் பொதிகை மலைக்கு வந்து அங்கே வாழ்பவர்களைத் துன்புறுத்தியதாகவும், அகத்தியர்தான் அவனை இலங்கைத்தீவுக்கு விரட்டியதாகவும் உரையாசிரியரான நச்சினார்க்கினியர். கூறுகிறார்.

நான்காயிரத்து நானூறு ஆண்டுகாலம் நீடித்த முதற் சங்கத்துக்கும் மூவாயிரத்து எழுநூறு ஆண்டுகாலம் நீடித்த இரண்டாம் சங்கத்துக்கும் தலைமைப் புலவராக இருந்தவர் அகத்தியர் என்று இறையனார் அகப்பொருளுரை தெரிவிக்கிறது. முதற் சங்கத்தின் இலக்கண நூலாக அகத்தியர் இயற்றிய அகத்தியம் இருந்தது. இரண்டாம் சங்கத்தில் அகத்தியமும் தொல்காப்பியமும் வேறு சில நூல்களும் இலக்கணங்களாக இருந்தன என்று சொல்லப்படுகிறது.

அகத்தியம் என்றொரு இலக்கண நூல் இருந்ததா? இருந்ததென்றால் அதற்கும் தொல்காப்பியத்துக்கும் என்ன தொடர்பு? என்னும் கேள்விகள் எல்லாம் தமிழ்நாட்டின் எல்லாப் பேரறிஞர்களாலும் விரிவாக விவாதிக்கப்பட்டிருக்கின்றன. அகத்தியத்தைப் பின்பற்றி எழுதாமல் வேறு சில இலக்கண நூல்களைப் பின்பற்றியே தொல்காப்பியர் தனது தொல்காப்பித்தை எழுதினார் என்று தனது காலத்தில் சில அறிஞர்கள் கருதியதாக உரையாசிரியரான பேராசிரியர் (கி.பி.1250–1300) சொல்கிறார். அந்த அறிஞர்களின் அந்தக் கருத்தை இறையனார் அகப்பொருளுரையை ஆதாரமாகக் கொண்டு பேராசிரியர் மறுதலிக்கிறார். தமிழ் மொழியையும் இலக்கணத்தையும் வடிவமைத்தவர் அகத்தியரே என்றும், அவரது பன்னிரண்டு சீடர்களில் மிகவும் போற்றுதவுக்குரியவர் தொல்காப்பியர் என்றும், அகத்தியம்தான் முதல் இலக்கண நூல் என்றும் அதை ஒட்டியே தொல்காப்பியர் தனது நூலை எழுதினார் என்றும், தமிழ்நாட்டில் கடல்கோள் ஏற்படுவதற்கு முன்னமேயே அகத்தியர் தனது நூலை எழுதியிருக்க வேண்டும் என்றும் அவர் நிறுவுகிறார்.

தொல்காப்பியத்துக்கும் அகத்தியத்துக்கு சம்பந்தமில்லை என்று வாதாடிய எதிர்க்கட்சியும் தனது நிலையை விட்டுக்கொடுப்பதாக இல்லை தொல்காப்பியர் அகத்தியரின் மாணவர் என்பதை அவர்களாலும் மறுக்க முடியவில்லை. ஆகையால் அவர்கள், தனது மாணவர்மீது அகத்தியர் பொறாமை கொண்டார் எனவும் அதன் விளைவாக இருவருக்கும் சண்டை ஏற்பட்டதாகவும் கதைகட்டி விட்டார்கள். அந்தக் கதையை நச்சினார்க்கினியர் விவரிக்கிறார்: தமிழ்நாட்டுக்கு வந்தபிறகு அகத்தியர் தனது மனைவி லோபாமுத்திரையை அழைத்துவருவதற்காகத் தனது மாணவரான தொல்காப்பியரை அனுப்பினார். அவர்கள் இருவரும் வரும்போது ஒருவருக்கொருவர் போதுமான இடைவெளிவிட்டு நடந்துவர வேண்டும் என்று கட்டளையிட்டார். ஆனால் அவர்கள் இருவரும் வரும் வழியில் வைகை ஆறு குறுக்கிட்டது. ஆற்றின் குருவின் மனைவி மூழ்கிவிடக்கூடாதே என்று அஞ்சிய தொல்காப்பியர் ஒரு மூங்கில் கம்பின் ஒரு முனையை லோபாமுத்திரையின் கையில் கொடுத்து மறுமுனையைத் தான் பிடித்துக் கொண்டு பத்திரமாக ஆற்றைக் கடக்கவைத்தார். தன்னுடைய கட்டளையை மீறியதற்காக அகத்தியர் தொல்காப்பியரையும் லோபாமுத்திரையையும் என்றென்றும் சொர்க்கலோகம் புகமுடியாத படிச் சபித்தார். சினங்கொண்ட தொல்காப்பியர் அதே சாபத்தைத் தனது குருவுக்குத் திருப்பித் தந்தார்.

இந்த அகத்திய–தொல்காப்பியச் சிக்கல் நீண்டகாலமாக இருந்து வருகிறது என்றும் நம்முடைய காலத்திலும் கூட இதற்கு ஒரு முடிவு ஏற்படவில்லை என்றும்

திரு.கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி தெரிவிக்கிறார். சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சரசுவதி மகால் நூலகம், பழனிக் கோயில், பாளையங்கோட்டைச் சித்த மருத்துவக் கல்லூரி ஆகிய இடங்களில் ஆயிரக்கணக்கில் சேகரிக்கப்பட்டுக் கிடக்கிற பனை ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து இது தொடர்பான செய்திகளை வெளிக்கொணர வேண்டியிருக்கிறது.

## அகத்தியர் அறிவியலுக்கு வழங்கிய கொடை

அறிவியலின் வெவ்வேறு துறைகளில் அகத்தியரின் பெயரால் வழங்கும் பல்வேறு தொன்மையான நூல்கள் கிடைக்கின்றன. இவற்றில் மருந்து வேதியியல், சோதிடம், அறுவை மருத்துவம் ஆகியவை அடக்கம். ஒரு மருத்துவர் என்ற முறையில் அவரை கிரேக்க நாட்டு ஹிப்போகிரேட்டசுடன் ஒப்பிடலாம். இவர்கள் இருவரது மருத்துவக் கோட்பாடுகளுக்கும் அதிசயிக்கத்தக்க ஒற்றுமைகள் சில அமைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. ஐரோப்பியரான லூட்விக் ஹாம் என்பவரால் 1677-இல் கண்டறியப்பட்ட விந்து நுண்ணுயிரியைப்பற்றி அகத்தியர் தனது குருநாடிச் சூத்திரம் என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

அகத்தியர் எழுதியதாகச் சொல்லப்படும் நூல்களின் பட்டியல் ஒன்று நூற்றறுபது ஆண்டுப் பழைமை உடைய ஒரு சித்த இலக்கிய நூலடைவு ஒன்றில் வழங்கப்பட்டிருக்கிறது. அதில் சில வருமாறு:

1. வைத்திய வாகடம் ஆயிரத்தைந்நூறு (1500 பாடல்கள் அடங்கியது)
2. தன்வந்திரி வாகடம் (தன்வந்திரியால் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டு அகத்தியரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. 200 பாடல்கள் அடங்கியது. நிறைய நோய்களைப்பற்றிய தகவல்களையும் அவற்றுக்குண்டான மருத்துவத்தையும் சொல்வதால் இந்த நூலுக்கு இந்திய மருத்துவர்களிடையே பெரும் மதிப்பு உண்டு. இந்த நூல் உள்ள சுவடி பாளையங்கோட்டையில் கிடைக்கிறது)
3. கண்ட பூரணம் (சமஸ்கிருத மூலம் தமிழில் அகத்தியரால் மொழிபெயர்க்கப்பட்டது. 1000 பாடல்கள் அடங்கியது)
4. பூசாவிதி (பூசை, சடங்குகள் இவைபற்றிய விவரங்கள் சொல்லப்படுகின்றன. 200 பாடல்கள் அடங்கியது)
5. தீட்சாவிதி (மந்திரம், உருந்திராட்ச மாலையை உருட்டுவது எப்படி என்பன போன்ற செய்திகள் 200 பாடல்களில் சொல்லப்பட்டுள்ளன)

6. பெருநூல் (10,000 பாடல்கள் அடங்கியது. பாளையங் கோட்டையில் கிடைக்கிறது)
7. பூரணநூல் (200 பாடல்கள் அடங்கியது. பேயோட்டும் வித்தைபற்றிப் பேசுகிறது)
8. பூரண சூத்திரம் (216 பாடல்கள் அடங்கியது)
9. கர்ம காண்டம் (300 பாடல்கள், மருத்துவ சாத்திரம்)
10. அகத்தியர் வைத்தியம் இருநூற்று ஐந்து
11. அகத்தியர் வைத்தியம் நூற்றைம்பது
12. அகத்தியர் வைத்திய வாகடம் நாற்பத்தெட்டு
13. அகத்தியர் வைத்தியம் பதினாறு
14. அகத்தியர் வைத்தியம் இருநூறு
15. கலைஞானம்
16. முப்பு
17. அகத்தியர் வைத்தியம் ஆயிரத்து இருநூறு
18. அகத்தியர் வைத்தியம் ஐந்நூறு
19. அகத்தியர் வைத்தியம் முந்நூறு
20. அகத்தியர் வாதகாவியம் முந்நூறு
21. அகத்தியர் ஆயிரத்து ஐந்நூறு
22. அகத்தியர் அறுநூறு
23. அகத்தியர் முப்பு ஐம்பது
24. அகத்தியர் குணவாகடம்
25. அகத்தியர் தண்டகம் நூறு

அகத்தியரின் மாணவர்கள் மொத்தம் பன்னிரண்டு பேர் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர் வெவ்வேறு கலைகளையும் அறிவியல் களையும் போதித்தார். பிறகு அவர்கள் அனைவரையும் மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் பணியில் ஈடுபடுத்தினார். அவருடைய மாணவர்களின் பெயர்கள் : தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துறைலிங்கனார், செம்புட்செயனார், வையபிகனார், விப்பியனார், பனம்பாரனார், கழாரம்பனார், அவினயனார், காக்கைப்பாடினியார், நத்தத்தனார், வாமனர் ஆகியோர் இவர்களைப்பற்றி மிகச் சில செய்திகளே நடக்குத் தெரியவருகின்றன. அகத்தியரின் மற்ற முக்கியமான சீடர்களில் திருக்குறளை எழுதிய திருவள்ளுவர், பாபாஜி நாகராஜ் ஆகியோர் அடக்கம். உலகின் மீது இவர்கள் இருவரும் செலுத்திய தாக்கம் மிகவும் அதிகம்.

அகத்தியர் வட இந்திய வேதப்பண்பாட்டினருக்கும் தென்னிந்தியர்களுக்கும் இடையேயான பண்பாட்டுப் பாலம் அவருடைய ஆசிரமம் ஒருங்கிணைப்பின் அடையாளம் அங்கு வரும் ஒவ்வொருவரும் தனிமுதலான கடவுளைத் தத்தம் விருப்பப்படி வழிபடலாம். ஒவ்வொரு தெய்வத்துக்கும் அங்கே தனித்தனிக் கோயில் இருந்தது. ராமன் தன்னுடைய ஆசிரமத்திற்கு வந்தபோது அகத்தியர் அவனைத் தமிழ் வரவேற்றதாகவும் அவருடைய சீடர்கள் வேதமந்திரங்களை ஒலித்து வரவேற்றதாகவும் கம்பன் சொல்கிறான்.

சிவன்–பார்வதி திருமணத்தின் போது பூமி சுமை தாங்காமல் வடக்குப்பக்கம் சாய்ந்ததால் அதைச் சமன் செய்யத் தென்பகுதிக்கு அகத்தியர் சிவனால் அனுப்பப்பட்டார். தெற்கு தன்னுடைய கடவுள்களை மறந்து விட்டதா அல்லது கடவுள்கள் எல்லாம் வடக்குக்குக் குடிபெயர்ந்து தனிமுதற் கடவுளை மறைத்து விட்டார்களா? இவற்றில் அகத்தியர் தெற்கிற்கு அனுப்பி வைக்கப்பட்ட காரணம் எது என்று தெரியவில்லை எது எப்படியாயினும் அகத்தியர் ஓர் ஒன்றுபட்ட பண்பாட்டைப் பரப்பினார். அவர் பாபாஜிக்குப் போதித்த கிரியா யோகம் என்கிற ஆன்மீக நுட்பம் கணிப்பொறிகளாலும் செய்தித்தொடர்பு வசதிகளாலும் வையச் சிற்றூராக மாறிக்கொண்டிருக்கிற இன்றைய உலகத்தில் பண்பாட்டு ஒருமைப் பாட்டைக் கொண்டு வருவதற்கு மிகவும் பயன்படும் என்பது திண்ணம்.

**நன்றி –பாபாஜியும் பதினெண்சித்தர் கிரியா யோகமரபும்.**

# தமிழ்நாடு வரலாற்றுச் சுவடுகள்

**சென்ற இதழின் தொடர்ச்சி**

**1901** மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தைப் பாண்டித்துரைத் தேவர் துவக்குதல்.

**1903** அகில இந்தியக் காங்கிரசின் பத்தொன்பதாவது மாநாடு.

**1904** சர். ஜேம்ஸ் தாம்சன், ஏ.ஓ. வில்லியர்ஸ் (மீண்டும்) ஆளுநர்கள்.

**1906** சர். ஆர்தர்லாலி ஆளுநர் • வ.உ.சி.யின் சுதேசிக் கப்பல் போக்குவரத்து.

**1907** ஒத்தி வைக்கப்பெற்ற சூரத் காங்கிரஸ் மாநாடு சென்னையில் நடைபெற்றது • மதுரையில் தர்ம ரக்ஷன சபை என்னும் இந்துக்கள் அமைப்பு.

**1908** தூத்துக்குடி பஞ்சாலை வேலை நிறுத்தம். வ.உ.சி. தடையை மீறிப் பொதுக்கூட்டம் - கைது (மார்ச் 13) • வ.உ.சி., சுப்பிரமணிய சிவாவிற்கு 40 ஆண்டு சிறைத் தண்டனை • இந்தியா பத்திரிகை துவக்கம்.

**1909** சென்னைத் திராவிடர் சங்கம் தோற்றம் • அண்ணா பிறப்பு (செப்.15).

**1910** இராமநாதபுரம் புதிய மாவட்டம் உதயம் (ஜூன் 1).

**1911** சர். டி.டி. சிப்சன் கார்மைக்கேல் ஆளுநர் • வாஞ்சிநாதன் தூத்துக்குடி சப் கலைக்டர் ஆஷை மணியாச்சி இரயில் நிலையத்தில் சுட்டு தானும் தற்கொலை.

**1912** சர் மர்ரே ஹாம்மிக் ஆளுநர்.

**1914** அகில இந்திய காங்கிரசின் 29 ஆவது மாநாடு தமிழகத்தில்.

**1916** அன்னிபெசன்டின் ஹோம்ரூல் இயக்கம் • பெண்ட்லாண்டு பிரபு ஆளுநராதல் • வ.உ.சி., சிவா விடுதலை • நீதிக்கட்சி தோற்றம்(நுவ.20).

**1917** சென்னை மாநிலச் சங்கம் தோற்றம் • *ஜஸ்டிஸ், திராவிடன்* ஏடுகள் வெளியீடு.

**1918** சென்னை மாநிலச் சங்க இரண்டாவது மாநாடு • பாரதியார் கைது.

**1919** சர். அலெக்சாண்டர் கார்டியூ, வில்லிங்டன் பிரபு, சர். பிரீமேன் தாமஸ் ஆளுநர்கள் • இராஜாஜி-காந்தி சந்திப்பு • பாரதி-காந்தி சந்திப்பு.

**1920** பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராதல் • முதல் பொதுத் தேர்தல் (நுவ.30). தியாகராயரை அமைச்சரவை அமைக்க ஆளுநர் வில்லிங்டன் அழைப்பு (டிச.8). சுப்பராயலு ரெட்டியார் முதலாம் அமைச்சர்(டிச.8). சுப்பராயலு ரெட்டியார் பதவி விலகல் • சென்னை இராஜதானிக் காங்கிரஸ், தமிழ்நாடு காங்கிரஸ், கர்நாடக காங்கிரஸ் எனப் பிரிக்கப்படல் • காந்தியடிகள் சென்னை, தூத்துக்குடி வருகை.

**1921** பனகல் அரசர் இராமராய நிங்கர் முதல் அமைச்சர். முதல் மாநிலச் சட்ட சபைக் கூட்டம் (ஜனவரி12) • முதல் கம்யூனல் ஜி.ஓ. எனப்படும் வகுப்புரிமை ஆணை (செப்.16) • சட்ட மன்ற விரிவாக்கம் • இந்து அற நிலையச் சட்டம், பெண்களுக்கு வாக்குரிமை, தேர்தலில் போட்டியிட உரிமை • பாரதி மறைவு (செப்.11) • ஏ.சுப்பராயலு மறைவு (நுவ.21).

**1922** இரண்டாவது வகுப்புரிமை ஆணை.

**1923** இரண்டாவது தேர்தல் (அக்.31). மீண்டும் நீதிக்கட்சி ஆட்சி அமைப்பு (நுவ.19) • பணியாளர் இழப்பீட்டுச் சட்டம், திருமண வயதுச்சட்டம், சென்னைப் பல்கலைக்கழகச் சீர்திருத்தச் சட்டம் அறிமுகம்.

**1924** எல்.டி.சுவாமிக்கண்ணு முதல் பேரவைத் தலைவராகத் தேர்தல் மூலம் தேர்வு • வைக்கம் அறப்போர் (மார்ச்3) • வில்லிங்டன் பதவி விலகல்(ஏப்.12) • பெரியாரின் *குடியரசு* பத்திரிகை.

**1925** தியாகராயர் மறைவு (ஜூன்29) • தமிழ் மாகாண காங்கிரஸ் மகாநாடு (நுவ.30).

**1926** பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தொடக்கம் • மூன்றாம் பொதுத் தேர்தல். டாக்டர் பி. சுப்பராயன் முதல் அமைச்சர் • காரைக்குடி அருகில் சிரா வயலில் ப. ஜீவானந்தம் காந்தி ஆசிரமம் தொடங்குதல் • 42 ஆவது அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு சென்னையில் கூடியது • முத்து லெட்சுமி முதல் பெண் சட்டசபை உறுப்பினர்.

**1927** நீல் சிலை அகற்றும் போராட்டம், ஆயுதச் சட்ட எதிர்ப்புப் போராட்டம் • பெரியார் காங்கிரசிலிருந்து விலகல்.

**1928** பனகல் அரசர் மறைவு (டிச.15).

**1929** சைமன் கமிஷன் சென்னை வருகை (பிப்.2). செங்கல்பட்டில் சென்னை மாநில சுயமரியாதை இயக்க முதல் மாநில மாநாடு • சர்.என்.ஈ. மார் ஜோரி பாங்ஸ், சி.ஈ.ஸ் டான்லி ஆளுநர், அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டம், தேவதாசி முறை ஒழிப்புச் சட்டங்கள். சுப்பராயன் அமைச்சரவை பதவி விலகல்(அக்.27).

**1930** சட்டசபைத் தேர்தல். நீதிக் கட்சி வெற்றி. பி. முனிசாமி முதல் அமைச்சர் (அக்.27) • இராஜாஜி தலைமையில் வேதாரண்யம் உப்பு அறப்போர்.

**1931** முனிசாமி அமைச்சரவை பதவி விலகல்.

**1932** பொப்பிலி அரசர் முதல்வர் (நவ.5) • திருப்பூர் குமரன் மறைவு.

**1933** பெரியாரின் *புரட்சி ஏடு* தோற்றம்.

**1934** சர். முகம்மது உஸ்மான், சர். சி.ஈ. ஸ்டான்லி ஆளுநர்கள் • பொதுவுடைமைக் கட்சிக்குத் தடை.

**1935** இராஜாஜி தமிழக காங்கரஸ் கட்சித் தலைவர் • சென்னை சட்டசபை இரண்டடுக்கு கொண்டதாக மாறியது.

**1936** பொப்பிலி, பி. டி. இராசன் முதல்வர்கள் (4-4-36/ 24-8-36) • கே.வி. ரெட்டி, எர்ஸ்கின் ஆளுநர்கள்.

**1937** வெங்கடரெட்டி முதல்வர் (1-4-37 முதல் 14-7-37 வரை) • இராஜாஜி முதல்வராகத் தேர்வு (ஜூலை 14) • முதலாவது இந்தி எதிர்ப்பு மாநாடு (டிச.26) • விற்பனை வரி அறிமுகம்.

**1938** முதல் வகுப்பிலிருந்து மூன்றாம் வகுப்பு வரை இந்தி கட்டாயப் பாடம் (21.4.38) • தமிழ்நாடு தமிழருக்கே எனும் முழக்கம் (11.9.38) • பெரியார் நீதிக் கட்சித் தலைவராகத் தேர்வு (டிச.29).

**1939** பெரியார் கிரிப்ஸ் சந்திப்பு (ஏப்.22) • இராஜாஜி அமைச்சரவை பதவி விலகல் (அக்.26) • ஆளுநராட்சி அறிவிப்பு (அக்.30) • நீதிக்கட்சி மாநாட்டில் தனித் தமிழ்நாடு கோரிக்கை (டிச.29).

**1940** தனிநபர் அறப்போர் (அக்.17) • இந்தி கட்டாயப் பாடம் என்ற அரசாணை நீக்கம் (பிப்.21) • காமராசர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராதல்.

**1941** மதுரை திருவள்ளுவர் கழகம் தோற்றம் • சர்.ஏ.ஜேம்ஸ்ஹோப் ஆளுநர்.

**1942** டாக்டர் ஏ.எல். முதலியார் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் • வெள்ளயனே வெளியேறு இயக்கம் • கோவை விமான நிலையம் தீவைப்பு, வன்முறைகள்.

**1944** ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயர் திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றம்.

**1945** திருப்பரங்குன்றம் காங்கிரஸ் மகாநாடு. இராஜாஜி காங்கிரசில் மீண்டும் இணைதல்.

**1946** காந்திஜியின் தமிழகக் கடைசி வருகை • மறைமலையடிகள் மறைவு • 1935 ஆண்டுச் சட்டப்படி பொதுத்தேர்தல். சென்னை இராஜதானி என்ற ஒன்றுபட்ட சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராக பிரகாசம் பதவியேற்பு (ஏப்.30). சர்.ஹென்றி வோலி நைட், சர் எட்வர்ட் ஆளுநர்கள்.

**1947** ஓமந்தூரார் முதல்வர் (மார்ச்23). பிரகாசம் பதவி விலகல்.

**1948** ஓமந்தூர் இராமசாமி மீண்டும் முதல்வர் • இனாம் நிலங்கள் ஒழிப்பு, சமீன்தாரி ஒழிப்பு • இந்தி கட்டாயப் பாடம் (ஜூன்20) • தேவதாசி முறை ஒழிப்பு • தமிழ்க் கலைக் களஞ்சியம் வெளியீடு • நாமக்கல் இராமலிங்கர் அரசவைக் கவிஞராக நியமனம் (ஜூலை. 17) • சென்னையில் இந்தி எதிர்ப்பு மாநாடு • வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டுப் முறை அறிமுகம் • சர். கிருஷ்ண குமார் சிங்ஜி பவசிங்ஜி சென்னை ஆளுநர் (செப்.9) • கவர்னர் ஜெனரல் இராஜாஜிக்குக் கறுப்புக்கொடி • பெரியார், அண்ணா கைது (செப்.15).

**1949** குமாரசாமி இராஜா தமிழக முதல்வர் (ஏப்.6) • திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றம் (செப்.17) • தமிழக அரசுச் சின்னமாக கோபுரம் தேர்வு • கட்டாயக் கல்வித் திட்டம்.

**1950** திராவிட இயக்கம் குடியரசு நாளை துக்க நாள் என அறிவித்துக் கறுப்புக் கொடி போராட்டம்.

**1951** அரசியல் சட்ட 15 ஆவது விதியின் நான்காவது உட்பிரிவு திருத்தம் • தாழ்த் தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு • தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியின் தோற்றம் • தமிழ்நாடு அரசு சமூக நலத் துறை தோற்றம்.

**1952** பிரகாசா தமிழக ஆளுநர் (மார்ச் 3). முதல் பொதுத் தேர்தல். ஐக்கிய ஜன நாயகக் கட்சி என்னும் கூட்டணிக் கட்சி தோற்றம். குமாரசாமிராஜா பதவி முடிவு (ஏப்.4). இராஜாஜி முதல்வராதல் (ஏப்.10) • மது விலக்குச் சட்டத் திருத்தம்.

**1953** தமிழறிஞர் திரு.வி.க மறைவு • கீழ் பவானி, மணிமுத்தாறு, மலம்புழா, மேட்டூர் கால்வாய்த் திட்டங்கள் • இராஜாஜியின் புதிய கல்வித் திட்டம் அறிமுகம்.

**1954** இராஜாஜி தமிழக முதல்வர் பதவி விலகல் • காமராசர் முதல்வராதல் (ஏப். 13) • காங்கிரசிலிருந்து இராஜாஜி விலகுதல் • தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து காமராசர் விலகுதல் • டாக்டர் சுப்பராயன் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராதல் • மார்ஷல் நேசமணி தலைமையில் குமரி மாவட்டத்தை தமிழகத்தோடு இணைக்கப் போராட்டம் • கல்கி கிருஷ்ண மூர்த்தி மறைவு.

**1955** குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் • ஆவடியில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் அறுபதாம் ஆண்டு மகா நாடு.

**1956** குமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைப்பு • கேரள, கர்நாடகப் பகுதி கள் தமிழகத்திலிருந்து தனியாகப் பிரி தல் (நவ) • விபச்சாரத்தடைச் சட்டம் • ஏ.ஜே.ஜான் தமிழக ஆளுநர்.

**1957** இரண்டாவது பொதுத்தேர்தல். காமராஜர் தலைமையில் மீண்டும் அமைச்சரவை (ஏப்.13) • சட்டசபை, அரசினர் தோட்டத்திலிருந்து புனித ஜார்ஜ் கோட்டைக்கு மாற்றம் • வி.வி. இராச மன்னார் தற்காலிக ஆளுநர் (அக்.1).

**1958** விஷ்ணுராம் மேதி ஆளுநர் பொறுப்பேற் றல் (ஜன.1).

**1959** சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி.மு.க. வெற்றி • நாவலர் சோமசுந்தர பாரதி மறைவு (டிச.14).

**1960** இந்து அறநிலையத் துறை நிர்வாகச் சட்டம் நிறைவேறுதல் • திருத்தணி தமிழகத்துடன் இணைப்பு(ஏப்.) .

**1961** சமூக நலத்துறையும், பெண்கள் முன் னேற்றப் பிரிவும் இணைந்து பெண் கள் நலத்துறை உருவாகியது.

**1962** மூன்றாவது பொதுத்தேர்தல். காங்கிரஸ் வெற்றி. காமராசர் மீண்டும் முதல்வரா தல் (மார்.15) • காஞ்சிபுரம் தொகுதி யில் அண்ணாதுரை தோல்வி • நிலச் சீர்திருத்த உச்சவரம்புச் சட்டம்.

**1963** காமராசர் திட்டம்-காமராசர் முதல்வர் பதவியிலிருந்து விலகுதல் (செப். 20). மீ. பக்தவத்சலம் முதல்வர் (அக்.2) • அண்ணா தலைமையில் சென்னையில் இந்தி எதிர்ப்பு மாநாடு (அக்.13).

**1964** சென்னை மாநகராட்சி, மாவட்ட நக ராட்சி, பஞ்சாயத்துச் சட்டம் • மார்க் சீய பொதுவுடமைக் கட்சி தோற்றம் • ஜெய சாம்ராஜ்ய வாடியார் ஆளுநர் (மே.5) • சந்திரா ரெட்டி இடைக்கால ஆளுநர் (நவ.24).

**1965** திருச்சியில் இராஜாஜியுடன் இந்தி எதிர்ப்பு மாநாடு. தமிழகம் முழுவதும் வன்முறை. இராணுவம் வருகை • பி.சந்திர ரெட்டி (13.8.65-19.9.65) ஆளுநர் • மீண்டும் ஜெயசாம்ராஜ்ய வாடியார் ஆளுநர் (செப். 20) • மதுரையில் புதிய பல்கலைக் கழகம் • கல்லூரிகளில் தமிழ் முதன் முதலில் பயிற்று மொழி ஆதல் • சேலம் மாவட்டத்திலிருந்து தருமபுரி மாவட்டம் தனியே பிரிந்தது (2.10.65).

**1966** பி.சந்திராரெட்டி (ஜன, 24-ஜூன். 27), சர்தார் உஜ்ஜல்சிங் ஆளுநர்.

**1967** பொதுத்தேர்தல். தி.மு.க. கூட்டணி வெற்றி. அண்ணா தமிழக முதல்வர் (மார்ச் 6) • சட்டப் பேரவையில் தமிழ் நாடு பெயர் மாற்றத் தீர்மானம்.

**1968** தமிழக அரசின் தமிழும், ஆங்கிலமும் என்ற இரு மொழித்திட்டக் கொள்கை அறிவிப்பு (ஜன23) • செங்கல்பட்டு தனி மாவட்டமாதல் (ஜூலை 6) • தமிழ்

நாடு பெயர் மாற்றத் தீர்மானம் ஏற்பு (நவ.23) • இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் கூடியது • நாகை, ஓசூர், கடலூர் முதலிய இடங்களில் தொழிற்பேட்டைகள் • கல்லூரிகளில் தமிழ் பயிற்று மொழி • விதவை மறு மண உதவித் திட்டம்.

**1969** சென்னை மாநிலம் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் (ஜன.14) • அண்ணா மறைவு (பிப்3) • கருணாநிதி தமிழக முதல்வர் (பிப்.10) • புதுமுக வகுப்பு வரை அனைவருக்கும் இலவசக் கல்வி.

**1970** ஓ.பி. இராமசாமி மறைவு (ஆக.25) • குமரி முனையில் விவேகானந்தர் நினைவுச் சின்னம் திறப்பு.

**1971** சட்டசபை கலைப்பு. மீண்டும் பொதுத் தேர்தல். தி.மு.க. வெற்றி. மு.கருணாநிதி முதல்வர் (மார்ச்15) • மைய மாநில உறவு குறித்த இராசமன்னார் குழு அறிக்கை • பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் • தமிழ்நாடு வேளாண்பல் கலைக் கழகச் சட்டம் • தமிழ்நாடு மது விலக்குச் சட்டம் • அனைத்து வகுப்பினர்களும் அர்ச்சகராகும் சட்டம் • கே.கே. ஷா தமிழக ஆளுநர் (மே.25) • குடிநீர் வடிகால் வாரியம் அமைப்பு.

**1972** காயிதே மில்லத் இஸ்மாயில் மறைவு (ஏப்.14) • எம்.ஜி.ஆர். தி.மு.க.விலிருந்து நீக்கம்; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடக்கம் (அக்.16) • இந்திய- இலங்கை உடன்பாட்டின்படி கச்சத் தீவு இழப்பு (டிச.2) • மதியழகன் பேரவைத் தலைவர் பதவி யிலிருந்து நீக்கம் • இராஜாஜி மறைவு (டிச.25).

**1973** பெரியார் மறைவு (டிச.24) • தமிழகத்தில் பெண் காவலர் அறிமுகம்.

**1974** சென்னையில் வள்ளுவர் கோட்டக் கால்கோள் விழா (ஜன.18) • ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம்.

**1975** சென்னைத் தொலைக்காட்சி நிலையம் திறப்பு (ஆக.15) • அவசரநிலை அறி விப்பு (ஜூன்25) • காமராசர் மறைவு (அக்.2) • தமிழ்நாடு அரசு சரக்குப் போக்குவரத்துத் திட்டம்.

**1976** தி.மு.க. ஆட்சிக் கலைப்பு • ஆளுநர் ஆட்சி (ஜன.31) • வள்ளுவர் கோட்டம் துவக்கம் (ஏப். 15) • பழைய காங்கிரஸ்-இ. காங். இணைப்பு • மோகன்லால் சுகாதியா ஆளுநர் (ஜூன்16) • நகர சபைகள் கலைப்பு (ஜூன்30).

**1977** பொதுத் தேர்தல் (மார்ச்16). எம். ஜி. இராமச்சந்திரன் தமிழகத்தின் 16 ஆவது முதல்வர் (ஜூலை4) • கோவிந்தன் நாயர் (9.4.77- 26.4.77) மற்றும் பிரபுதாஸ் பட்வாரி (26.4.77) ஆளுநர் • மதுரை யில் இந்திரா காந்திக்கு எதிராக ஆர்ப் பாட்டம் (அக். 29).

**1978** அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டம் • தமிழகப் பள்ளிகளில் 10+2 எனும் புதிய முறைக் கல்வி.

**1979** பெரியார் மாவட்டம் துவக்கம்.

**1980** அ.இ.அ.தி.மு.க அரசு கலைப்பு (ஜன7) • நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.- இ.காங்கிரஸ் கூட்டணி வெற்றி • சட்டசபைத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க வெற்றி (மே.20). எம்.ஜி.ஆர். மீண்டும் தமிழக முதல்வர் (ஜூன்.9) • பிரபுதாஸ் பட்வாரி ஆளுநர் பதவியிலிருந்து நீக்கம் (அக்.26). சாதிக் அலி தமிழக ஆளுநர் (அக்.26).

**1981** இந்தியத் திரைப்பட பொன் விழா துவக்கம் (ஜன.1) • மதுரையில் உலகத் தமிழ் மகாநாடு துவக்கம் (4). மது விலக்கு ஒத்தி வைப்பு தீர்மானம் (21) • மதுவிலக்கு தளர்வு (பிப்.2) • தமிழ்ப் பல்கலைக்கழகத் தோற்றம் (செப். 15) • கவிஞர் கண்ணதாசன் மறைவு (அக். 17).

**1982** தமிழ்நாடு அரசின் பஞ்சாயத்துச் சட்டத்திற்கு உயர்நீதிமன்றம் தடை (ஜன. 6) • முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் துவக்கம் (ஜூலை1) • காவிரி நீர் சிக்கல் தீர அனைத்துக் கட்சிகளின் பத்துமணி நேர வேலை நிறுத்தம் • 114

ஆண்டுகளாக வெளி வந்த *மெயில்* பத்திரிகை நிறுத்தம்(டிசம்பர்).

**1983** தமிழ்நாடு- ஆந்திர அரசுகளிடையே கிருஷ்ணா நதி நீர் உடன்பாடு (ஏப்.19) • கல்பாக்கம் அணுமின் நிலையம் முதல் பிரிவு திறப்பு (ஜூலை 2) • இலங்கையில் தமிழர்கள் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து தமிழ்நாடு அரசு ஆதரவு வேலை நிறுத்தம் (ஆக.2) • மு.கருணாநிதி, அன்பழகன் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பதவி விலகல் (10).

**1984** அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகச் சட்டம் (மார்ச் 2) • ஜெயலலிதா நாடாளுமன்ற மேலவை உறுப்பினராதல் (ஏப்.23) • சென்னை விமான நிலையத்தில் குண்டு வெடிப்பு (ஆக. 2) • எம். ஜி. ஆர் சுகவீனம் (அக்.14). எம்.ஜி. ஆர். நியூயார்க் மருத்துவமனைக்குப் புறப்படுதல் (நவ.6) • நாடாளுமன்ற, சட்டப் பேரவைத் தேர்தல் அறிவிப்பு (24) • எம்.ஜி. ஆர் ஆண்டிப்பட்டி தொகுதியிலிருந்து சட்டசபைக்குப் போட்டி (டிச. 15) • எம்.ஜி.ஆருக்கு சிறுநீரக மாற்று சிகிச்சை (19) • தமிழகத்தில் மீண்டும் அ.இ.அ. தி.மு.க. ஆட்சி (டிச.29).

**1985** எம்.ஜி.ஆர் தமிழக முதல்வர் (பிப். 10) • காமராசர், பசும்பொன்தேவர் திருமகன் மாவட்டங்கள் தோற்றம் (மே.26) • இலங்கைத் தமிழர் நலனுக்காக எம்.ஜி.ஆர் ஒரு நாள் உண்ணா நோன்பு • கல்பாக்கம் ஃபாஸ்ட் ப்ரீடர் டெஸ்ட் ரியாக்டரை பிரதமர் ராஜீவ் நாட்டுக்கு அர்ப்பணித்தார் (டிச.16).

**1986** மேல் சபை ஒழிப்புத் தீர்மானம் (மே.14) • தமிழ்நாடு, கர்நாடக காவிரி நீர்ப் பங்கீட்டுப் பேச்சு உடன்பாடின்றி முடிவு (ஜீன் 6) • திருநெல்வேலி, அருப்புக் கோட்டை இடைத் தேர்தல்களில் அ.இ.அ.தி.மு.க வெற்றி (செப். 1) • திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்கள் தோற்றம் (20) • அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத் துவக்கம் (அக்.2) • மேலவை ஒழிப்பு நடைமுறைக்கு வருதல் (10) • அரசியல் சட்ட எரிப்பிற்காக கருணாநிதி பதவி இழப்பு (டிச.9).

**1987** தமிழ்நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகச் சட்டம் தாக்கல் • முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் மறைவு (பிப். 12) • *ஆனந்த விகடன்* ஆசிரியர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட இரண்டு பத்திரிகை ஆசிரியர்களுக்குத் தமிழக சட்டப்பேரவை மூன்று மாத சிறைத் தண்டனை (ஏப். 4) • இந்திய இலங்கை உடன்பாட்டிற்கு தி.மு.க. ஆதரவுக் கட்சிகள் எதிர்ப்பு மகாநாடு (அக். 22) • தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் மறைவு (டிச. 24) • நாவலர் தற்காலிக முதல்வர் • விஸ்வ நாதன் ஆனந்த் இந்தியாவின் செஸ் கிராண்ட் மாஸ்டர்(28)

**1988** ஜானகி இராமச்சந்திரன் தமிழக முதல்வர்(ஜன.7) • காங்கிரசிலிருந்து சிவாஜி கணேசன் விலகல் (29) • சட்டப் பேரவை கலைப்பு (30) • பி.சி. அலெக்சாந்தர் தமிழக ஆளுநர் (பிப். 17) • சென்னையில் இந்திரா காந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகமையம் திறப்பு (மார்ச் 2).

**1989** பொதுத்தேர்தல். தி.மு.க.வெற்றி (ஜன.22). கருணாநிதி தமிழக முதல்வராகப் பதவியேற்பு (27) • சுர்ஜித்சிங் பர்னாலா ஆளுநர் (31) • பட்ஜெட் கூட்டம் • சட்டப் பேரவையில் விரும்பத்தகா செயல்கள் (மார்ச் 25).

**1990** வாரம் ஐந்து நாள் வேலை என்று அரசு அலுவலக வேலை மாற்றம் (பிப்.7). இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான அரசு ஆதரவு பந்த் (20). தலாய்லாமா காஞ்சி பரமாச்சாரியாரைச் சந்தித்தல் (13). தி.மு.க அரசுக்கு எதிராகக் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனிடம் ஜெயலலிதா புகார் (26). தமிழ் இலக்கியக் கலைக்களஞ்சியம் வெளியீடு

(28). பெண்களுக்குப் பெற்றோர் சொத்தில் பங்கு உண்டு என்னும் சட்டம்(29).

**1991** கருணாநிதி அரசு நீக்கம் • சட்டப் பேரவைக் கலைப்பு • குடியரசுத் தலைவராட்சி (ஜன.30). ஆளுநர் பர்னாலா பதவி விலகல்- பீஷ்மநாராயண்சிங் ஆளுநர் (பிப். 15). முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தேர்தல் பிரசாரத்தின் போது ஸ்ரீபெரும்புதூரில் மனித வெடி குண்டிற்குப் பலி (மே21). பொதுத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க- இ.காங். கூட்டணி வெற்றி • ஜெயலலிதா தமிழக முதல்வராகப் பதவியேற்பு (ஜுன்.24). தஞ்சையிலிருந்து நாகை காயிதே மில்லத் எனும் புதிய மாவட்டம் உதயம் • திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் மீண்டும் திண்டுக்கல் அண்ணா மாவட்டமானது.

**1992** கும்பகோணம் மகாமக நெரிசல் விபத்தில் 48 பேர் பலி • ராஜாளி கடற்படை விமானத் தளம் நாட்டுக்கு அர்ப்பணிப்பு • தூத்துக்குடி விமான நிலையம் திறப்பு • சென்னையில் சார்க் நாடுகளின் கலைவிழா.

**1993** அன்னை தெரசா பல்கலைக்கழகம் சென்னையிலிருந்து கொடைக்கானலுக்கு மாற்றப்பட்டது • நாட்டின் முதல் தமிழ் சாட்டிலைட் தொலைக்காட்சி நிகழ்ச்சி (சன் டிவி) துவக்கம் • சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் குண்டு வெடிப்பு • விழுப்புரம் ராமசாமி படையாச்சி மாவட்டம் (மாநிலத்தின் 23 ஆவது மாவட்டம்) உதயமானது • ஆன்மீகச் சொற்பொழிவாளர் கிருபானந்த வாரியார் காலமானார்.

**1994** காஞ்சி மாமுனிவர் எனப்படும் சந்திர சேகரேந்திர சுவாமிகள் காலமானார் • சென்னையில் சர்வதேச தடகளப் போட்டி • சென்னையில் சர்வதேச பெண்கள் மகாநாடு • வைகோ தலைமையில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் எனும் புதிய கட்சி துவக்கம் • சென்னை ஜார்ஜ் கோட்டையில் புதிய கொடிமரம் • தமிழ்நாடு இட ஒதுக்கீட்டுச் சட்டத்திருத்த (85 ஆம் திருத்தம்) மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல்

**1995** தஞ்சாவூரில் எட்டாம் உலகத் தமிழ் மகாநாடு • தடா சட்டத்தின் கீழ் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஒன்பது விடுதலைப் புலிகள் சிறையிலிருந்து தப்பி ஓடினர் • குன்றக்குடி அடிகளார் காலமானார் • சென்னை கன்னியாகுமரி எகஸ்பிரஸும் சரக்கு இரயிலும் மோதி 60 பேர் பலி • டான்சி நில முறைகேடு குறித்து முதல்வர் ஜெயலலிதா மீது தி.மு.க. வழக்குத் தொடர்ந்தது • திருச்சி மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டது • தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் துவங்கியது.

**1996** சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. - த.மா.க. கூட்டணி வெற்றி • தமிழக முதல்வராக மு. கருணாநிதி • முன்னாள் முதல்வர் திருமதி ஜானகி ராமச்சந்திரன் காலமானார் • மெட்ராஸ், *சென்னை* எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது • உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள். தி.மு.க., த.மா.க., இ.கம்யூனிஸ்ட் கூட்டணி பெரும் வெற்றி • சென்னை மேயராக மு.க. ஸ்டாலின் • ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சிறையிலடைப்பு.

**1997** திருவள்ளுர்-எம்.ஜி.ஆர், ராஜாஜி, வீரன் அழகு முத்துக்கோன், ஏ.டி. பன்னீர் செல்வம் எனும் நான்கு புதிய மாவட்டங்கள் நிலவில் வந்தன • கல்வி நிறுவனங்களில் ராகிங் தடைச் சட்டம் • தஞ்சை பெரிய கோவில் யாகசாலை தீ விபத்தில் 42 பேர் பலி • சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம் துவக்கம் • சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் துவக்கம் • சென்னையில் சர்வதேச எய்ட்ஸ் மகாநாடு.

**1998** கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு • பயங்கரவாதிகள் தடைச்சட்டம் நிறைவேற்றம் • சென்னை திருச்சி அகல இரயில்பாதை திறப்பு • பெண்களை கேலி செய்வோருக்குத் தண்டனை தரும் மசோதா சட்டப்பேரவையில் நிறைவேறியது.

**1999** சென்னையில் தமிழ்நெட் 99 மகாநாடு • பொடா சட்டத்தை தமிழக அரசு விலக்கிக்கொண்டது • தமிழகத்தின் முதல் உழவர்சந்தை மதுரையில் துவங்கப்பட்டது.

**2000** சென்னையில் சர்வதேச ஆயுர்வேத மகாநாடு • தரமணியில் டைடல் பார்க் தொழில்நுட்பப் பூங்கா திறக்கப்பட்டது • தமிழக அரசின் உயிரி தொழில் நுட்பக் கொள்கை வெளியீடு • சென்னையில் அகில உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாடு.

**2001** சென்னையில தமிழ் இணையப் பல்கலைக்கழகம் துவங்கப்பட்டது • மக்கள்தொகை கணக்கெடுப்பு (மார்ச் 1 கணக்குப்படி மாநில மக்கள்தொகை 6,21,10,839) • சட்டப்பேரவைத் தேர்தல். அ.இ.அ.தி.மு.க. பெரும்பான்மை வெற்றி. தமிழக முதல்வராக ஜெயலலிதா பதவியேற்பு• முன்னாள் முதல்வர் மு. கருணாநிதி கைது • நடிகர் திலகம் சிவாஜி கணேசன் காலமானார் • த.மா.கா. தலைவர் மூப்பனார் காலமானார் • ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்; ஓ. பன்னீர் செல்வம் புதிய முதல்வர் • உள்ளாட்சி மன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. முன்னிலை வெற்றி.

**2002** ஆண்டிப்பட்டி சட்டப்பேரவை தொகுதியிலிருந்து ஜெயலலிதா வெற்றி. தொடர்ந்து மீண்டும் தமிழக முதல்வராகப் பதவியேற்பு • வேலை நிறுத்தத் தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது • பொடா சட்டத்தின் கீழ் வைகோ கைது • த.மா.கா. கட்சி காங்கிரஸுடன் இணைந்தது • கட்டாய மதமாற்றத் தடுப்பு அவசரச் சட்டம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது • சென்னையில் சர்வதேச கம்ப்யூட்டர் மென்பொருள் மகாநாடு.

**2003** தமிழக அரசு தைரியம் மற்றும் சாகசச் செயலுக்கான கல்பனா சாவ்லா விருதை அறிவித்தது • பொது இடங்களில் புகைபிடிக்கத் தடைச் சட்டம் அமலில் வந்தது • இந்தியாவின் முதல் பெண் கமாண்டர் படை தமிழகத்தில் அறிமுகம் செய்யப்பட்டது • தமிழக அரசு ஊழியர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் • சென்னையில் ஆறாவது தமிழ் இணைய மகாநாடு.

**2004** ஸ்ரீரங்கம் திருமண மண்டப தீ விபத்தில் 51 பேர் பலி • ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ ஜாமீனில் விடுதலை • தர்மபுரி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதிய கிருஷ்ணகிரி மாவட்டம் உதயமானது • கும்பகோணம் சரஸ்வதி வித்யாலயம் பள்ளி தீவிபத்தில் 90 குழந்தைகள் பலியானார்கள் • கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி துவக்கம் • சந்தன வீரப்பனும் கூட்டாளிகளும் அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் • கொலை வழக்குக் குற்றச் சாட்டில் காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் கைது.

**2005** எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு ஞானபீட விருது • சேது சமுத்திரத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் • தொழிற்கல்வி நிறுவனங்களுக்கான பொது நுழைவுத் தேர்வை தமிழக அரசு ரத்து செய்தது • நடிகர் விஜய் காந்த் 'தேசிய முற்போக்கு திராவிட கழகம்' எனும் புதிய அரசியல் கட்சியைத் துவக்கினார்.

**2006** தொழிற்கல்வி நிறுவனங்களில் சேர நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்படுவதாக கவர்னர் பர்னாலா அறிவிப்பு • சட்டப் பேரவைத் தேர்தல். தமிழக முதல்வராக மு. கருணாநிதி பதவியேற்பு (ஐந்தாவது முறை).

நன்றி — மனோரமா இயர்புக் 2008

*With Best Copliments From*

# EVEREST INN LODGE

***A/C & Non A/C Rooms Available***

***Van Hiring***

***Tour Arrangement***

***Airport Transport***

***Air Ticketing***
***World wide & Jaffna***

**No. 76A, Sri Kathireshan Street,**
**Colombo - 13**
**Tel: 0112-392924 , 0112-461059**

## மகராஜியின் உள் அமைதியை பற்றிய செய்தி

* சனிக்கிழமை தோறும் காலை 10.00 மணிமுதல் 11.00 மணிவரை தமிழில் சன்கேபிள் பொதிகைச் சனலிலும்,
* ஞாயிற்றுக்கிழமை தோறும் பி.ப. 12.30 மணிமுதல் 1.00 மணிவரை ஆங்கிலத்தில் TNL சனலிலும்,
* ஞாயிற்றுக்கிழமை தோறும் தினக்குரல் பத்திரிகையிலும் வெளியாகின்றன.

மேலும் கற்றுக் கொள்வதற்கும் மகராஜி வழங்கும் ஞானவழிமுறைக்கு தயாராவதற்கும் கீழே குறிப்பிட்ட நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வசந்தசாலை
இல. 33 சிவன் வீதி, திருகோணமலை.
தொலைபேசி இல: 026-2224894 0777556088

www.tprt.org
www.maharaji.net
www.contactinti.net

### தன்னையறிந்து கொள்ளும் பயணம்

"இந்த ஞான வழி முறைக்குத் தயாராவதில் உங்களுக்கு உதவுவதற்கு நான் சில திறவுகோல்களைத் தயார் செய்திருக்கிறேன் – நான் அவைகளைத் திறவு கோல்கள் என அழைக்கின்றேன். அவை ஒவ்வொன்றும் நீங்கள் தயாராவதற்கு முக்கியமானவை. மொத்தமாக ஆறு திறவுகோல்கள் உள்ளன. அவற்றில்ஐந்து உங்களை தயாராக்குவதற்காக உள்ளன. ஆறாவது திறவுகோல் ஞானவழிமுறை என்கிற அன்பளிப்பு

– மஹாராஜி –

நான் அளிப்பது சொற்களுக்கு அப்பாற்பட்டது. நான் உள்ளிருக்கும் அமைதியின், நிறைவின் அனுபவத்தை சென்று அடைய ஒரு வழிமுறையை அளிக்கின்றேன். நான் அதை ஞான அறிவு என்று அழைக்கின்றேன்.

ஞான வழிமுறையில் நான்கு பயிற்சி முறைகள் அடங்கியுள்ளன. அவை ஒருவருக்கு தன் கவனத்தை வெளியேயிருந்து உள் நோக்கித் திருப்ப உதவும். அது கற்பனையோ அல்லது உருவாக்குதலோ இல்லை. அது ஏற்கனவே உள்ளத்தில் இருப்பதை நோக்கி, கவனத்தை குவித்து சென்றடைவதற்கான ஒரு சாத்தியமான வழி.

ஞான அறிவின் பயணம் தன்னையறிந்து கொள்ளும் ஒரு பயணம்

இந்த பயணத்தை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கு ஞான வழிமுறையின் பயிற்சி முறைகளை கற்கத் தயாராவதற்கு நான் அவர்களுக்கு உதவ முன் வருகிறேன். மேலும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஆனந்தத்தை அனுபவிக்க தொடர்ந்து தூண்டுதலும் வழிகாட்டுதலும் அளிக்கின்றேன்.

மஹாராஜி